

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 161 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 08 – திங்கள்கிழமை 22 ஜனவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 161: Thiruvalluvar Year - 2055 - Thai 08 - Monday 22 January 2024 - Chennai 12 Pages ₹ 5.00


## கொள்கைச் சீயங்களால் குலுங்கியது சேலம்! எங்கெங்குக் காணினும் வெள்ளுடை இளைஞர்களே!





## சேலத்தில் சூளுரைப்போம்! சேர்ந்து எழுவோம்!

# ‘இந்தியா’ கூட்டணி வெல்லட்டும்!

## இலட்சோப லட்சம் பேர் திரண்ட தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை !

**சேலம், ஜன. 22 -**

**சேலம் - பெத்தநாயக்கன் பாளையத்தில் லட்சோப லட்சம் பேர் திரண்ட தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில எழுச்சி மாநாட்டில் உரையாற்றிய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலத்தில் சூளு ரைப்போம்! சேர்ந்து எழுவோம்! ‘இந்தியா’ கூட்டணி வெல்லட்டும்” எனச் சூளுரை மேற்கொண்டார்.**

கழகத் தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (21.1.2024) சேலம் - பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற தி.மு.க. இளை ஞரணி 2ஆவது மாநில மாநாட்டில் ஆற் றிய உரை வருமாறு :-

கடல்போல் திரண்டிருக்கும் திராவிடப் பட்டாளமே! கொள்கைப் பிடிப்பும், இலட்சிய தாகமும் கொண்ட இலட்சக்கணக்கான தம் பிமார்களான உங்களை வீரபாண்டியார் மாவட்டமான சேலம் மாவட்டத்தில் ஒருசே ரப் பார்க்கிறபோது, எனக்கு பெரிய உற்சா கமும், மகிழ்ச்சியும் – ஏன்; புத்துணர்ச்சியும் பிறக்கிறது! தெற்கில் விடியல் பிறந்திருப்ப தைப்போல விரைவில் இந்திய நாடு முழு வதும் விடியல் பிறக்கும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது!

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், எனக்கு இருபது வயது குறைந்தது போன்று புது தெம்பு வருகிறது! இப்படிப்பட்ட எழுச்சி மிகு - ஏற்றமிகு இளைஞரணி இரண்டா வது மாநாட்டின் தலைவர் என் நெஞ்சமெல் லாம் நிறைந்திருக்கும் கழகத்தின் ஆற்றல்மிகு அடலேறு தம்பி உதயநிதி அவர்களே! உரையாற்றி அமர்ந்திருக்கும், கழகத்தின் பொதுச்செயலாளர் ஆருயிர் அண்ணன் துரைமுருகன் அவர்களே! கழ கத்தின் பொருளாளர் அருமை நண்பர் டி. ஆர்.பாலு அவர்களே! இளைஞர்களுக்கு இணையாகப் பணியாற்றி, இளைஞர் அணி மாநாட்டை கம்பீரமாக ஒருங்கி ணைத்து நடத்திக் கொண்டிருக்கும் கழகத் தின் முதன்மைச் செயலாளர் - ஆயிரூர்ச் சகோதரர் கே.என்.நேரு அவர்களே! கழ கத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி - க.பொன்முடி - ஆ.ராசா - அந்தியூர் செல்வராஜ் அவர்களே! கழகத் தின் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றியிருக்கும் துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றத்தில் கர்ஜனை மொழியாகத் திகழும் - அன்புத் தங்கை கனிமொழி அவர்களே! காலை முதல் பல்வேறு தலைப்புகளில் உரை யாற்றி அமர்ந்துள்ள - கொள்கைப் பரப்புச் செயலாளர் - அருமைச் சகோதரர் திருச்சி சிவா உள்ளிட்ட கருத்துப் போராளிகளே!

### உதயநிதியைப் பாராட்டுகிறேன் - வாழ்த்துகிறேன்!

**இந்த உணர்வை - உற்சா கத்தை எழுச்சியை ஏற்படுத்தித் தந்திருக்கும், இளைஞரணிச் செயலாளர் - தம்பி உதயநிதி அவர்களைப் பாராட்டுகிறேன் - வாழ்த்துகிறேன்!**

**“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற் றான் கொல் எனும் சொல்” என்று அய்யன் வள்ளுவர் சொன்னது**



**போல, அவரின் செயல்கள் கழகப் பணிகள் - மக்கள் தொண்டு அமைந்தி ருக்கிறது! கழகத்திற் கான பணி, மக்களுக்கான பணி இரண்டிலும் எனக்குத் துணையாக மட்டுமல்ல; தூணாக தம்பி உதயநிதி இருக்கிறார்! அந்த உழைப்பைப் பார்த்துதான் நானும், பொதுச் செய லாளரும், தலைமைக் கழக நிர்வாகி களும் மகிழ்ச்சி அடைகிறோம்!**

ஆற்றல்மிகு ஒருங்கிணைந்த சேலம் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட மாவட் டச் செயலாளர்களே! தலைமைக் கழக நிர் வாகிகளே! இளைஞர் அணியின் மாநிலத் துணைச் செயலாளர்களே! மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப் பாளர்களே! சமுதாயத்தின் ஈட்டி முனைக ளாக இருக்கும் இளைஞர் அணித் தம்பி மார்களே! என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே! உங் கள் அனைவருக்கும் வணக்கம்!

### பேரறிஞர் அண்ணா பெருமைப்பட்டது போல் நானும் பெருமைப்படுகிறேன்!

திராவிட இயக்கம் தோன்றி நூறாண்டு களுக்கு மேல் ஆகிவிட்டது; நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்டு 75 ஆண் டுகள் ஆகிவிட்டன! 1949ஆம் ஆண்டு செப் டம்பர் 17 அன்று சென்னை இராபின்சன் பூங்காவில் திரண்டிருந்த அதே கொள்கை உறுதியையும், இலட்சிய வேட்கையையும் இன்றைக்கு இலட்சக்கணக்கான இளை ஞர்களான உங்களிடம் பார்க்கிறபோது, இந்த இயக்கத்தின் தலைவராக மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! ”அஞ்சாநெஞ்சர் களை அருந்தம்பிகளாகப் பெறும் பேறு பெற்றேனே!” என்று பேரறிஞர் பெருந் தகை அண்ணா பெருமைப்பட்டதுபோல நான் பெருமைப்படுகிறேன்.

இந்த உணர்வை – உற்சாகத்தை எழுச் சியை ஏற்படுத்தித் தந்திருக்கும், இளைஞ ரணிச் செயலாளர் - தம்பி உதயநிதி அவர் களைப் பாராட்டுகிறேன் – வாழ்த்துகிறேன்! “மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்” என்று அய்யன் வள்ளுவர் சொன்னது போல, அவரின் செயல்கள் கழகப் பணிகள் – மக்கள் தொண்டு அமைந்திருக்கிறது! கழ கத்திற்கான பணி, மக்களுக்கான பணி இரண்டிலும் எனக்குத் துணையாக மட்டு மல்ல; தூணாக தம்பி உதயநிதி இருக்கி றார்! அந்த உழைப்பைப் பார்த்துதான் நானும், பொதுச் செயலாளரும், தலை மைக் கழக நிர்வாகிகளும் மகிழ்ச்சி அடை கிறோம்!

எனக்கு முப்பது வயது இருக்கும்போது தலைவர் கலைஞரும், இனமானப் பேரா சிரியரும் இளைஞரணியை உருவாக்கி னார்கள்! அவர்கள் எங்கள்மேல் வைத்த நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றியது போல, என்னுடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து, வெற்றிக்கொடி கட்டும் கொள்கைப் படையாக இளைஞரணி செயல்பட்டு வரு வதை, இந்த சேலம் மாநாடு, நாட்டுக்கே சொல்லிவிட்டது!

“எந்தக் கொம்பனாலும் கழகத்தை வீழ்த்த முடியாது” என்ற நம்பிக்கை ஊட் டும் மாநாடாக இந்த சேலம் இளைஞரணி மாநாடு அமைந்துவிட்டது! இவ்வாறு என்னை நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல வைத்த இளைஞரணிச் செயலாளர் மாநில துணைச் செயலாளர்கள் – மாவட்ட அமைப் பாளர்கள் துணை அமைப்பாளர்கள் என்று ஒட்டுமொத்த இளைஞர் அணி நிர்வாகி களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த் துகளும் நன்றியும்!

### மாநாடு என்றால் நேரு! நேரு என்றால் மாநாடு!

அடுத்து முக்கியமாக, இந்த மாநாடு இவ் வளவு பிரமாண்டமாக நடைபெறக் காரண மானவர் – நம்முடைய முதன்மைச் செய லாளர் கே.என்.நேரு! ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், “மாநாடு என் றால் நேரு; நேரு என்றால் மாநாடு!” மாநாடு நடக்கும் இடத்தில் நேரு இருப்பார். நேரு இருக்கும் இடத்தில் மாநாடு நடக்கும்! ஒரு மாநாட்டை எப்படி நடத்த வேண்டும் என்று, எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கிறார். அப்படிப்பட்ட நேரு அவர்களுக் கும், அவரோடு தோளோடு தோள்நின்று பணியாற்றிய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகச் செயலாளர்களான ஆற் றல்மிகு ராஜேந்திரன், சிவலிங்கம், செல்வ கணபதி ஆகியோருக்கும் சேலம் மாவட்டக் கழகங்களின் அனைத்து நிர்வாகிகளுக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னு டைய மனமார்ந்த பாராட்டுகள் வாழ்த்துகள்!

### இளைஞர் அணி என் தாய் வீடு!

இளைஞரணி, என் தாய்வீடு! என்னை வளர்த்த என்னை உருவாக்கிய இடம்! நான் இன்று கோடிக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் தலைவராக கடமையாற்றி வருவதற்கும் தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மக்கள் தொண்டாற்றி வருவ தற்கும் அடித்தளம் இட்டது இளைஞரணி! அதனால் எனக்கு எப்போதும் தனிப் பாசமும் உரிமையும் உண்டு.

### இளைஞரணிப் பொறுப்பேற்று - நான் தமிழ்நாட்டையே வலம் வந்தேன்!

1980ஆம் ஆண்டு ஜீலை 20ஆம் நாள் மதுரை ஜான்சிராணி பூங்காவில் இளைஞ ரணி தொடங்கப்பட்டது. அன்று முதல், நகரம் கிராமம் எங்கும் கழகக் கொடியை ஏற்றுவ தும் பாசறைக் கூட்டங்கள் நடத்துவதும் என்று தமிழ்நாட்டையே நான் வலம் வந்தேன். மாநாடுகளில் நடத்தப்படும் பெரும் பேரணிகள் எல்லாம் எங்களின் வெண்சீருடை அணிவகுப்பால் பலரை யும் அண்ணாந்து பார்க்க வைத்தது.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

## எனக்குத் துணையாக மட்டுமல்ல; தூணாக உதயநிதி இருக்கிறார்!

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 22-01-2024

# கம்பன் காட்டும் நாடும் மோடி காட்டிய நாடும்

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மைடும், ஓர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்.

(வண்மை – கொடை, திண்மை – துணிவு, செறுநர் – பகைவர், வெண்மை – அறியாமை)

கம்பராமாயணம் பேசுபவர்கள் அனைவரும் சிலாகித்துச் சொல்லும் பாடல் இது. ‘கம்பன் சொல்லுவான்’ என்ற பீடிகையுடன் முழங்குவார்கள். அயோத்தி நகரின் செழுமை எப்படி இருந்தது என்பதைச் சொல்லும் பாடல் இது.

அயோத்தியில் வறுமை என்பதே இல்லை என்பதால் கொடைக்கு அவசியமில்லை!

பகைவர் எவரும் இல்லை என்பதால் துணிவுக்கும் வேலையில்லை!

பொய்யுரை ஏதும் இல்லை என்பதால் உண்மைக்கும் பொருளில்லை!

மிக்க கேள்வியறிவு பொருந்தி இருப்பதால் அறியாமை என்பதும் இல்லை.! இது தான் அயோத்தியைப் பற்றிய கவி கம்பரின் அருமையான கற்பனையாகும்.

இல்லை இல்லை என்று இடப்படும் இப்பட்டியலில் உள்ளவை நான்கும் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட நான்கு பெருமிதங்கள் ஆகும். அந்த நான்கு பெருமிதங்களை எடுத்து அயோத்தி நகரம் தாங்கி நின்றது என்பது கம்பனின் விதந்தோதுதல் ஆகும். ‘பொய்யாமை யன்ன புகழில்லை’ என்ற வள்ளுவன் வரியையும் இத்தோடு இணைத்துக் கொள்கிறார் கம்பர். அதனால் தான், ‘கம்பன் கண்ட கனவு’ என்பார் அறிஞர் அ.ச.ஞானசம்பந்தன்.

**இன்று திடீரென அயோத்தி பஜனை அதிகமாகக் கேட்கிறது. இதனை பா.ஜ.க. அரசியல் பஜனையாகவே ஆக்கிவிட்டது. பக்தியும், கடவுளும் அவரவர் தனித்த உரிமையாம். விருப்பமாம். அதனை அரசியல் மூலதனம் ஆக்கிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க.வும், அதன் தலைமையும். பத்தாண்டுகளுக்கு முன்னால் மக்களுக்கு கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாத பிரதமர் நரேந்திரமோடி, ராமருக்கு கோவில் கட்டியதையே ( அதுவும் முழுமையாகக் கட்டிமுடிக்கவில்லை என்பது பக்தர்களின் வருத்தம். அதனை சரியாகக் கட்டவில்லை என்று இந்து சாமியார்களின் குற்றச்சாட்டு!) சாதனையாகச் சொல்லப் பார்க்கிறார்.**

**கம்பன் காட்டிய, கனவு கண்ட நாட்டை உருவாக்கி விட்டாரா பிரதமர் நரேந்திரமோடி? அதைச் செய்திருந்தால் பாராட்டலாம்.**

**“பாரதத்தில் இருந்து வறுமையை ஒழிப்பது இன்றியமையாதது. அந்த நேசத்துக்குரிய இலக்கை அடையும் வரை நாங்கள் ஓய மாட்டோம்” என்று கடந்த அக்டோபர் மாதம் ஒரு பள்ளி விழாவில் பிரதமர் பேசினார். அப்படியானால் வறுமை இங்கே இருப்பதை அவரே ஒப்புக் கொண்டார். ‘வண்மை இல்லை, வறுமை இன்மையால்’ என்று அவரால் சொல்ல முடியவில்லை.**

கடந்த ஒன்பது ஆண்டு கால மோடி ஆட்சியில் இந்தியாவில் பட்டினி அதிகரித்துள்ளது என்பது குறித்த புள்ளிவிபரம், அதே அக்டோபர் மாதம்தான் வெளியானது. உலகப் பட்டினி குறிப்பீட்டில் (Global Hunger Iidex ) இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு மிக மோசமான இடத்தை அடைந்துள்ளது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 125 நாடுகளில் 111 ஆவது இடத்தை பெற்றுள்ளது மோடியின் இந்தியா. 28.7 என்ற புள்ளிகளை மட்டுமே மோடியின் பாரதம் பெற்றிருந்தது. பாகிஸ்தான் 102 ஆவது இடத்திலும், வங்கதேசம் 81 ஆவது இடத்திலும், நேபாளம் 69 ஆவது இடத்திலும், இலங்கை 60 ஆவது இடத்திலும் இருக்கிறது. மோடியின் பாரதம், 111 ஆவது இடத்தில் இருக்கிறது.

**மோடியின் ஆட்சிக்குப் பிறகு தான் நிலைமை மோசம் ஆகி இருக்கிறது.**

2011 ஆம் ஆண்டு 122 நாடுகளில் இந்தியா 67 ஆவது இடம்

2012 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 65 ஆவது இடம்

2013 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 63 ஆவது இடம்

2014 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 55 ஆவது இடம் – என இந்தியாவில் பட்டினிக் குறியீடு இருந்தது. 2014 ஆம் ஆண்டு மோடி, இந்தியாவின் பிரதமராகிறார். அதன்பிறகு என்ன ஆனது பாருங்கள்...

2015 ஆம் ஆண்டு 117 நாடுகளில் 80 ஆவது இடம்

2016 ஆம் ஆண்டு 118 நாடுகளில் 97 ஆவது இடம்

2017 ஆம் ஆண்டு 119 நாடுகளில் 100 ஆவது இடம்

2018 ஆம் ஆண்டு 132 நாடுகளில் 103 ஆவது இடம்

2019 ஆம் ஆண்டு 117 நாடுகளில் 102 ஆவது இடம்

2020 ஆம் ஆண்டு 107 நாடுகளில் 94 ஆவது இடம்

2021 ஆம் ஆண்டு 116 நாடுகளில் 101 ஆவது இடம்

2022 ஆம் ஆண்டு 121 நாடுகளில் 107 ஆவது இடம்

2023 ஆம் ஆண்டு 125 நாடுகளில் 111 ஆவது இடம் – என **இந்தியாவின் பட்டினிக் குறிப்பீட்டில் மோடியின் பாரதம் சரிந்து கொண்டே வந்துவிட்டது. இதுதான் மோடி காட்டிய பாரத நாடு ஆகும். இதைப் பற்றி எல்லாம் எந்தக் கவலையும் இல்லை. ஆனால் கோவில் கட்டுவதன் மூலமாக தன்னால் ஏற்பட்ட அத்தனை வேதனைகளையும் மறைக்கப் பார்ப்பதுதான் அரசியல் மோசடி ஆகும்.**

காஷ்மீருக்கு சிறப்பு அதிகாரம் பறிப்பு – குடியுரிமைச் சட்டம் கொண்டு வருதல் ஆகியவற்றின் மூலமாக தங்களை மதக் காவலர்களாகக் காட்டுவதும் ஒருவகையான ஏமாற்றுதல் ஆகும். உண்மையான மனிதாபிமானம் இருக்குமானால் அந்த மதத்தைச் சேர்ந்த மக்களின் நல்வாழ்வுக்கு நன்மை செய்திருக்க வேண்டும். அவர்களது கண்ணீரைத் துடைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு விலைவாசியை குறைத்திருக்க வேண்டும். பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலையைக் குறைத்திருக்க வேண்டும். அவர்கள் மனதிலும் முகத்திலும் புன்னகையை வர வைத்திருக்க வேண்டும். இது எதையும் செய்ய முன்வரவில்லை.

**கார்பரேட்டுகளுக்கு வண்மையும் (கொடைகள்) ஏழைகளுக்கு வறுமையும் தான் மோடி காட்டும் நாடு.**

# அ.தி.மு.க. ஆடும் ‘உள்ளே - வெளியே’ ஆட்டம் பா.ஜ.க. போட்டுக் கொடுத்த நாடகம்!

## சேலம் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

போராட்டக் களங்களில் இளைஞர்கள் அதிகமாகப் பங்கெடுத்தார்கள். தேர்தல் பரப்புரைகளில் இளைஞர்கள் சுற்றிச் சுழன்று பணியாற்றினார்கள்.

**இளைஞர்களே! உழைப்பால் உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!**

1980ஆம் ஆண்டு முதல் கட்சிக்குள்ள புது ரத்தம் பாய்ச்சியது, இளைஞரணி! “உழைப்பு உழைப்பு – உழைப்பு” என்று தலைவர் கலைஞர் அவர்கள் என்னைப் பாராட்டினார்கள். அந்த உழைப்புக்கு இளைஞரணித் தம்பிமார்கள் என்னை உற்சாகம் ஊட்டிக்கொண்டே இருப்பார்கள். எப்போதும் நான் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு இன்னொரு முக்கியக் காரணம் என்னைச் சுற்றி இளைஞர்களே இருந்தார்கள்! இளைஞர்களால் உருவான போர்க்கருவிதான் இந்த ஸ்டாலின்! நான் மட்டும் அல்ல, ஏராளமான தளபதிகளை உருவாக்கிய ஈடு இணையற்ற அணிதான் இளைஞரணி!

எங்களால் உருவாக்கப்பட்ட பலரும் எம்.எல்.ஏ.,க்களாக, எம்.பி.,க்களாக, அமைச்சர்களாக, மாவட்டச் செயலாளர்களாக உயர்ந்தார்கள். நாளை அத்தகைய பொறுப்புகளுக்கு நீங்களும் வரலாம். வருவீர்கள்! வர வேண்டும்! அந்த உயரத்திற்கு உங்கள் உழைப்பால் உங்களை நீங்களே தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இளைஞரணித் தம்பிமார்களே! நான் உங்களுக்கு அறிமுகம் செய்ய விரும்பும் கொள்கை உணவு எது தெரியுமா?

**நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி - தலைவர் கலைஞர்!**

**பல்லாயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்ட நம்முடைய தமிழினத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளுங்கள். நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட திராவிட இயக்கத்தின் கொள்கையையும் – அதற்காகப் போராடிய தலைவர்களின் வரலாற்றையும் முழுமையாகத் தெரிந்து கொள்ளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக ஆட்சியில் இருக்கிறது. ஒவ்வொரு முறை ஆட்சியில் இருந்தபோதும் இந்த தாய்த்தமிழ்நாட்டுக்குச் செய்து கொடுத்த சாதனைகள் – தீட்டிய திட்டங்களைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் இந்த நவீன தமிழ்நாட்டை உருவாக்கிக் கொடுத்த சிற்பி நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் என்று உங்களுக்குப் புரியும்!**

அதுமட்டுமல்ல, தமிழினத்திற்கு எதிரான நாசகாரச் சக்திகள் இதுவரை எந்த வகையில் எல்லாம், நம்முடைய தமிழினத்தின் மொழியையும், பண்பாட்டையும் நாசம் செய்தன என்றும் உங்களுக்குப் புரியும்!

இந்தக் கொள்கை உணவுர்தான் – கொள்கை உணர்வூட்டும்! உங்களைச் செழுமைப்படுத்தும்! உங்கள் மூலமாகக் கழகத்தையும் – தமிழ்நாட்டையும் வளர்க்கும்.

இன்றைக்கு காலை முதல் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா உள்ளிட்ட பலரும் – பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள். இந்தத் தலைப்புகள்தான் உங்களுக்கான பாடப்புத்தகங்கள். இந்தத் தலைப்புகள் கொண்ட புத்தகத்தை அந்தப் பேச்சாளர்களைக் கொண்டே எழுதவைத்து, உதயநிதி உங்களுக்கு உருவாக்கித் தருவார்!

**கொள்கை உரம்தான் கழகத்திற்கான உரம்!**

ஏன் என்றால், ஒரு காலத்தில் கழக மாநாடுகள் 4 நாட்கள் நடக்கும். அப்போது எல்லாவற்றையும் விரிவாகப் பேச முடியும். ஆனால் இப்போது, ஒருநாள் மாநாடு ஆகிவிட்டது. இன்னும் சொன்னால், ஒரு காலத்தில் மாநாடு நடத்தினால் மட்டும்தான் இதை எல்லாம் சொல்ல முடியும். ஆனால், இப்போது மாநாடு நடத்திச் சொல்ல வேண்டியதை வீடியோவாக எடுத்து சமூக ஊடகங்களில் பதிவிட்டால், ஒரே நேரத்தில் லட்சக்கணக்கானவர்களை சென்று சேரும் அளவிற்கு நவீனத் தொழில்நுட்பம் வளர்ந்து விட்டது. அப்படிப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நம்முடைய கொள்கைப் பரப்புரையைத் தொய்வில்லாமல் நீங்கள் செய்ய வேண்டும். கொள்கை உரம்தான் உங்களுக்கான உரம்! கொள்கை உரம்தான் கழகத்திற்கான உரம்! 75 ஆண்டுகளாகியும் கழகம் இன்றைக்கும் கம்பீரமாக நிற்கிறது என்றால், அதற்கு நம்முடைய கொள்கை உரம்தான் காரணம்.

**தமிழ்நாட்டில் இன்று ஆட்சி; ஒரு சீர்திருத்த இயக்கத்தின் கையில்!**

சமூகநீதி – சமத்துவம் சுயமரியாதை – சகோதரத்துவம் – மாநில உரிமைகள் – மொழிப்பற்று – இனப்பற்று – பெண்ணுரிமை – ஒடுக்கப்பட்டோர் நலன் – எல்லார்க்கும் எல்லாம் என்கிற அடித்தளத்தில் உருவாக்கப்பட்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். ஒரு சீர்திருத்த இயக்கத்தின் கையில் ஆட்சி நடத்தும் வாய்ப்பு வருமானால் என்னென்ன செய்ய முடியுமோ – அவை அத்தனையையும் செய்து காட்டியிருக்கிறோம்.

**தமிழ்நாட்டின் வளத்திற்கும், நலத்திற்கும் காரணமானவர்கள் நாம். இதற்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. அந்த ஆபத்தை உணர்ந்து, தடுப்பதற்காகத்தான் இளைஞர் அணி மாநாட்டையே, ‘மாநில உரிமை மீட்பு மாநாடாக’ நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.**

**நாம் பெயர் சூட்டிய நம்முடைய தமிழ்நிலத்துக்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. மொழியை அழித்து – தமிழ்ப் பண்பாட்டை அழித்து – மாநில மதிப்பை அழித்து – அதன் மூலமாக தமிழினத்தை அழித்து, நம்மை அடையாள மற்றவர்களாக ஆக்குவதற்குப் பாசிச பா.ஜ.க. திட்டமிட்டிருக்கிறது.**

**பழனிச்சாமியின் வேஷம்! அ.தி.மு.க.வினரே நம்பத் தயாராக இல்லை!**

**இன்னொரு பக்கம், பத்தாண்டு காலமாக தமிழ்நாட்டை எல்லா வகையிலும் பாழ்படுத்திய கட்சி, அ.தி.மு.க. அவர்கள் அழிவுவேலைகள் அனைத்தையும் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார் பழனிசாமி. இப்போது அவர்கள் ஆடும் ’உள்ளேவெளியே’ ஆட்டம், பா.ஜ.க. போட்டுக் கொடுத்த நாடகம்! பழனிசாமியின் பகல் வேஷத்தை அ.தி.மு.க. தொண்டர்களே நம்பத் தயாராக இல்லை, அதுதான் உண்மை!**

### மாநாடுகள் நடத்துவதற்கு வழிகாட்டி நேரு!



**இந்த மாநாடு இவ்வளவு பிரமாண்டமாக நடைபெறக் காரணமானவர் – நம்முடைய முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு! ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், “மாநாடு என்றால் நேரு; நேரு என்றால் மாநாடு!” மாநாடு நடக்கும் இடத்தில் நேரு இருப்பார். நேரு இருக்கும் இடத்தில் மாநாடு நடக்கும்! ஒரு மாநாட்டை எப்படி நடத்த வேண்டும் என்று, எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கிறார்.**

**பா.ஜ.க. அ.தி.மு.க. இவர்கள் இரண்டு பேரின் படுபாதகச் செயல்களைத் தடுப்பதுதான் நம் முன்னால் இருக்கும் முக்கியக் கடமை.**

மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் பொறுத்தவரை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது, தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கை!

மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்களை வழங்கிவிட்டு, நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு எவ்வளவு அதிகாரங்கள் தேவையோ அதை மட்டும் ஒன்றிய அரசு வைத்துக் கொண்டால் போதும்!

### பா.ஜ.க.விற்கு வேட்டு வைக்க ஆளுநர்களே போதும்!

இதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் இராசமன்னார் குழுவை 1969ஆம் ஆண்டு அமைத்தார். அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் விவாதித்து தீர்மானமாகவும் நிறைவேற்றினார். ‘மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி’ என்பது கலைஞர் நமக்குக் கற்றுக் கொடுத்த முழக்கம்!

**‘இண்டியா’ கூட்டணி ஆட்சி; மாநில உரிமைகளை வழங்கிடும்!**

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு, அந்த முழக்கம் இந்தியாவின் முழக்கமாக மாறப் போகிறது! அமைய இருக்கும் ‘இந்தியா’ கூட்டணி ஆட்சியானது – மாநில உரிமைகள் வழங்கும் சிறப்பான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் முயற்சியில் கவனம் செலுத்தும்!

தி.மு.க. அரசை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு, ‘மாநில அரசு உரிமைகள்’ என்று நான் சொல்லவில்லை! மாநிலங்களை ஆளும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், திரிணாமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் என்று எந்தக் கட்சியாக இருந்தாலும் – ஏன், பா.ஜ.க. ஆட்சி செய்கிற மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சி வேண்டும் என்று, எல்லா மாநிலங்களுக்குமான உரிமையாகத்தான் கேட்கிறோம்! இதை இங்கு மட்டுமல்ல, அண்மையில் ஒன்றிய பிரதமர் திருச்சிக்கு வந்தபோது, அவரை மேடையில் வைத்துக்கொண்டே இதைச் சொன்னவன், இந்த ஸ்டாலின்.

**மாநிலங்களை ஒழித்துக்கட்ட முயற்சிக்கிறார் பிரதமர் மோடி!**

இன்றைக்குப் பிரதமராக இருக்கும் அவர், ஒருகாலத்தில் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர்தான். ஆனால், இன்றைக்கு மாநிலங்களை மொத்தமாக ஒழித்துக் கட்டும் முயற்சியைத்தான் பிரதமராக வந்ததில் இருந்து மோடி அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்.

### வெற்றி பெறுபவரே வேட்பாளர்!

மாநில அதிகாரத்திற்கு உட்பட்டவைகளுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு சட்டங்களை இயற்றுகிறது. எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் மாநில அரசுகளிடம் ஆலோசனை செய்வது இல்லை. எதற்கும் மாநில முதலமைச்சர்களின் ஆலோசனைகளைக் கேட்பது இல்லை. புதிய கல்விக் கொள்கை, நீட், ஜி.எஸ்.டி என்று இவ்வாறு மாநிலங்களின் கல்வி – நிதி அதிகாரத்தை முற்றிலுமாகப் பறித்துவிட்டார்கள். ஒன்றிய அரசிற்குப் பணம் தரும் ஏ.டி.எம். ஆக மாநிலங்களை மாற்றிவிட்டார்கள்.

**பேரிடர் நிவாரணம்: ஒன்றியத்திலிருந்து ஒரு பைசா கூட வரவில்லை!**

மிகப்பெரிய இயற்கைப் பேரிடர் காலத்தில் கூட நமக்காக உதவிகள் செய்வது இல்லை. சமீபத்தில் வந்த பேரிடருக்கு, 37 ஆயிரம் கோடி ரூபாய் பணம் கேட்டிருக்கிறோம். ஆனால், இதுவரைக்கும் ஒரு பைசா வரவில்லை. பிரதமர் வந்தார் தருவேன் என்றார்; நிதி அமைச்சர் வந்தார் தருவேன் என்றார்; பாதுகாப்புத் துறை அமைச்சர் வந்தார் – தருவேன் என்றார்; உள்துறை அமைச்சரை நம்முடைய டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் எம்.பி.க்கள் பார்த்த போது அவரும், தருவேன் என்றார். ஆனால் இப்போது வரைக்கும் எதுவும் வரவில்லை!

இவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், **‘சும்மா திருக்குறள் சொன்னால் போதும். பொங்கல் கொண்டாடினால் போதும். அயோத்தியில் கோயில் கட்டினால் போதும். தமிழ்நாட்டு மக்கள் ஓட்டுப் போடுவார்கள்’ என்று ஏமாற்ற நினைக்கிறார்கள். அவர்கள் நம்மை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. இது பெரியார் மண்! பேரறிஞர் அண்ணாவின் மண்! தலைவர் கலைஞரின் மண்!**

நரேந்திர மோடி அவர்கள் இரண்டு முறை பிரதமர் ஆகியிருக்கிறார். இரண்டு முறையும் தமிழ்நாட்டு மக்கள் அவர் பிரதமராக வாக்களிக்கவில்லை. இந்த முறையும் நிச்சயம் வாக்களிக்கப்போவது இல்லை. இந்த முறை தமிழ்நாட்டைப் போலவே – இந்தியாவும் செயல்படப் போகிறது.

ஒன்றியத்தில் ஆட்சியில் இருப்பதால், என்ன செய்கிறார்கள்? கட்சிகளை உடைப்பது! எம்.எல்.ஏ.க்களை இழுப்பது! ஆளுநர்கள் மூலமாகக் குறுக்கு வழியில் ஆட்சியை நடத்தப் பார்ப்பது! சொல்லப்போனால், பா.ஜ.க.விற்கு வேட்டு வைக்க வேறு யாரும் வேண்டாம். ஆளுநர்களே போதும்! அவர்களே அந்தக் காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடித்திடுவார்கள்!

**ஒன்றியத்தில் - தமிழ்நாட்டுக்கு நல்லது செய்யும் ஆட்சி அமையும்!**

நாம் உருவாக்கி இருக்கும் ‘இந்தியா’ கூட்டணி அமைக்கும் ஆட்சி, ஒற்றைக்கட்சி ஆட்சியாக இருக்காது! சர்வாதிகார ஆட்சியாகவும் இருக்காது! கூட்டாட்சியாக இருக்கும்! மாநிலங்களை மதிக்கும் ஆட்சியாக இருக்கும்! தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்லது செய்யும் ஆட்சியாக இருக்கும்! இந்தியாவை அனைத்து வகையிலும் முன்னேற்றும் ஆட்சியாக இருக்கும்! அதற்கான பணி நம்மை நோக்கி வந்துகொண்டு இருக்கிறது.

தேர்தல் பணி தொடக்கமாக, சேலம் மாநாட்டுக்கு முன்பே மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த டி.ஆர்.பாலு தலைமையில் ஒரு குழுவும் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி தலைமையில் ஒரு குழுவும் தேர்தல் பணிகளை முழுமையாகக் கண்காணித்து ஒருங்கிணைக்க நேரு, வேலு, பாரதி, தங்கம் தென்னரசு, தம்பி உதயநிதி என ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஐவர் குழு 40 தொகுதிகளிலும் பணியாற்ற உள்ள நிர்வாகிகளை அழைத்து வெற்றிக்கான வியூகத்தைத் தருவார்கள். அறிக்கைத் தயாரிக்கும் குழு முக்கிய நகரங்களுக்கு வந்து மக்கள் கருத்துகளைக் கேட்பார்கள்.

கூட்டணியைப் பற்றியும் யார் வேட்பாளர் என்பதையும் தலைமையின் கையில் விட்டுவிடுங்கள். அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். வெற்றி பெறுபவரே வேட்பாளர் என்று முன்பே நான் சொல்லி இருக்கிறேன். யார் வெற்றி பெறுவார்களோ, அவர்கள்தான் வேட்பாளர். இது உறுதி!

**‘நாற்பதும் நமதே! நாடும் நமதே!’ என நாளை முதல் புறப்படுங்கள்!**

பல்லாயிரக்கணக்கான வாக்குச் சாவடி முகவர்கள் இருக்கிறார்கள். இலட்சக்கணக்கான நிர்வாகிகள் இருக்கிறார்கள். கோடிக்கணக்கான உடன்பிறப்புகள் இருக்கிறார்கள்! நாற்பதும் நமதே! நாடும் நமதே! என்று நாளை முதல் புறப்படுங்கள்.

**வருகின்ற மூன்று மாத காலம் நீங்கள் உழைக்கும் உழைப்பில்தான் இந்தியாவின் அடுத்த ஐந்தாண்டு எதிர்காலம் அடங்கி இருக்கிறது. உங்கள் உழைப்பை முழுமையாக வழங்குங்கள்! நம் அனைவரின் ஒற்றை நோக்கம்; இந்தியா கூட்டணியை வெல்ல வைப்பது! இந்தியாவை வெல்வது! இதுதான் சேலம் மண்ணில் நின்று இந்த நாட்டுக்கு நாம் சொல்லும் செய்தி!**

**நீங்கள் அனைவருமே எனது மகன்கள்தான்!**

என் உயிரினும் மேலான இளைஞரணித் தம்பிமார்களே... உதயநிதி மட்டுமல்ல, நீங்கள் அனைவருமே எனது மகன்கள்தான். உங்கள் ஒவ்வொருவரையும் எனது மகனாக – கழகத்தின் கொள்கை வாரிசுகளாகத்தான் பார்க்கிறேன். உங்கள் அனைவரையும் இங்கிருந்தபடியே அரவணைத்து அணைத்துக் கொள்கிறேன். உங்களால் நான் இப்போது இலட்சம் பேரின் சக்தியைப் பெற்றுவிட்டேன்.

**சேலத்தில் சூளுரைப்போம்! சேர்ந்து எழுவோம்! இந்தியா கூட்டணி வெல்லட்டும்! அதனை காலம் சொல்லட்டும்! நாற்பதும் நமதே! நாடும் நமதே!**

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், கழகக் கொடியை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## மாநிலங்களை நகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் வல்லாதிக்கப் போக்கிற்குக் கண்டனம்!

## சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி 2–வது மாநில உரிமை முழக்க மாநாட்டில் தீர்மானம்!

## தலைவர், முதல்வர் முன்னிலையில் – மாநாட்டுத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்மொழிந்தார்!

**சேலம், ஜன. 22-**

**சேலம் - பெத்தநாயக்கன்பாளையத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு - மாநில உரிமை மீட்பு முழக்கமாக எழுச்சியுடன் நடைபெற்றது. இம்மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறைவுப் பேருரை யாற்றினார்.**

**முன்னதாக நேற்று காலை மாநாட்டில் 25 முத்தாய்ப்பான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.**

**அத்தீர்மானங்களை மாநாட்டுத் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்திட, மாநாட்டில் திரண்ட இலட்சோப இலட்ச இளைஞர்கள், கழக முன்னணியினர், மக்கள் கரவொலி எழுப்பி வரவேற்றிட அத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**மாநாட்டுத் தீர்மானங்களில் இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கு அனுமதியளித்த ஜனநாயகப் பாதுகாவலர் - கழகத் தலைவருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட் டது.**

**மேலும் மாநிலங்களை நகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வல்லாதிக்கப் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 25 தீர்மானங்களை கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநாட்டின் ஒப்புதலுடன் நிறைவேற்றினார்.

அத்தீர்மானங்கள் வருமாறு: -




### தீர்மானம் - 1

**இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கு அனுமதியளித்த ஜனநாயகப் பாதுகாவலர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி!**

கூட்டாட்சிக் கொள்கைக்கு வலிமை சேர்க்கும் வகையில், இந்திய ஒன்றியத்தின் ஒருமைப்பாட்டையும் பன்முகத்தன்மையையும் பாதுகாக்கும் பெரும் பொறுப்பில் எவ்வித சமரசமு மின்றிப் பாடுபடும் பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வழியில் முன்னெடுத்துச் செல்லும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த பத்தாண்டு கால மக்கள் விரோத பா.ஜ.க. ஆட்சியில் பறிக்கப்பட்ட, தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய மாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் ஜனநாயகப் பாதுகாவல ராகத் திகழ்ந்து வரும் நிலையில், தன்னால் வளர்த்தெடுக்கப்பட்ட இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு அனுமதி தந்து, அதனை மாநில உரிமை மீட்பு முழக்கமாக முன்னெடுக்கச் செய்த இளைஞர் அணியின் தாயுமானவரான கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் - 2

**தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க அயராது பாடுபடும் முதலமைச்சருக்கு இளைஞர் அணி என்றும் துணை நிற்கும்!**

மாநிலங்களின் அதிகார உரிமைகள், சட்ட உரிமைகள், நிதி உரிமைகள் உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் ஒன்றிய பா.ஜ.க அரசு பறித்து வரும் நிலையிலும் கூட, தமிழ்நாட்டை இந்தியாவின் தலை சிறந்த மாநிலமாக முன்னேற்றுகிற வகையில், ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்ற ஒப்பற்ற சிந்தனையுடன் திராவிட மாடல் அரசைத் தலைமை தாங்கி நடத்தி வரும் இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் மக்கள் நலத் திட்டங்களையும், பொருளாதார வளர்ச்சிக்கான முன்னெடுப்புகளை யும் மக்களிடம் கொண்டு சேர்த்து, ஒவ்வொரு குடும்பமும் அரசாங்கத்தின் திட்டங்களால் பயன்பெறும் வகையில், சிறப்பான நிர்வாக ஆற்றலை வெளிப்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு பெயர் பெறவும், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர்ந்திடவும், கழக இளைஞர் அணி அயராது பாடுபடும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 3

**மகளிர் வாழ்வில் தன்னம்பிக்கையை வளர்க்கும் விடியல் பயணம்!**

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்கள் பலவும் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், தமிழ்நாட்டின் அடியொற்றி, பல மாநிலங்கள் பின்பற்று கிற வகையிலும் புகழ் பெற்றுள்ளன. முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தலைமைச் செயலகத்திற்குச் சென்றவுடனேயே மகளிருக்கு நகரப் பேருந்து களில் கட்டணமில்லாப் பயணம் என்ற மகத்தானத் திட்டத்திற் குக் கையெழுத்திட்டார் கழகத் தலைவர் அவர்கள். மகளிருடன், திருநங்கையர், மாற்றுத்திறனாளிகள், அவருக்குத் துணை வருவோர் ஆகியோருக்கும் கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் அளித்ததன் மூலம் 2023 டிசம்பர் மாதம் வரை இந்த விடியல் பயணம் திட்டத்தில் 404 கோடியே 6 லட்சம் முறை மகளிர் பயணம் மேற்கொண்டுள்ளனர். திருநங்கையர் 24 லட்சத்து 43 ஆயிரம் முறையும், மாற்றுத்திறனாளிகள் 3 கோடியே 17 லட்சத்து 27 ஆயிரம் முறையும் பயணங்கள் மேற்கொண்டுள்ளனர். இந்த விடியல் பயணத் திட்டம் தமிழ்நாட்டுப் பெண்களின் பயணச் செலவை மிச்சப்படுத்தி, மாதந்தோறும் சராசரியாக 1000 ரூபாய் அளவுக்கு சேமிப்பினை உயர்த்தியிருப்பதுடன், வேலைக்கான நேர்காணல் சந்தைக்குச் சென்று பொருட் களை விற்றல் உள்ளிட்ட வேலைவாய்ப்புகளைத் தன்னம்பிக்கையுடன் தொடங்குவதற்கும் உந்துசக்தியாகத் திகழ்கிறது. பாலின சமத்துவம் போற்றும் திராவிட மாடல் அரசின் விடியல் பயணத் திட்டத்தை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 4

**குடும்பத் தலைவியரின் உழைப்பை மதிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!**

குடும்பத்திற்காக வாழ்நாளெல்லாம் பாடுபடும் இல்லத்தரசிகளின் உழைப்பை மதித்துப் போற்றிடும் வகையில், குடும்பத் தலைவியருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் மகத்தான திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் செயல்படுத்தி, ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 இலட்சத்து 84 ஆயிரத்து 300 பெண்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் கிடைக்கச் செய்து, இது உதவித் தொகையல்ல, உங்களின் உரிமைத் தொகை என அறிவித்து, காலங்காலமாக உழைத்து வரும் குடும்பப் பெண்களின் உரிமைக்கான மதிப்பை வழங்கி, அவர்கள் தங்களின் அன்றாடச் செலவினை எதிர்கொள்ளும் வகையில் மாதந்தோறும் உரிமைத் தொகை வழங்கி வருவதுடன், இந்த உரிமைத் தொகையைப் பெற இயலாதவர்களில், தகுதி வாய்ந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்துத் தீர்வு காணும் பொறுப்பினை இளைஞர் அணியின் செய லாளர் இளைஞர் நலன்விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒப்படைத்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 5

**மாணவர்களின் உடல் நலன் காத்து ஊக்கமளிக்கும் காலை உணவுத் திட்டம்!**

பள்ளிகளுக்கு வருகை தரும் மாணவர்களுக்குப் படிப்புடன் உணவு என்பது திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சி ஆட்சியில் அறிமுகப் படுத்தப்பட்டு, கடந்த நூறாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் மதிய உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், முட்டையுடன் கூடிய சத்துணவு என காலத்திற்கேற்ற முன்னேற்றங்களுடன் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கி வந்த நிலையில், தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை நேரத்தில் ஊட்டமிகு உணவு தேவைப்படுவதை நேரில் அறிந்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என இந்தியாவுக்கே முன்னோடியான திட்டத்தினை 31 ஆயிரத்து 8 அரசு தொடக்கப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி, 18 லட்சத்து 54 ஆயிரம் மாணவர்கள் பயன்பெற்று, உடல் நலனும் ஊக்கத்திறனும் பெறுவதவற்கு காரணமான முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

**நிதி நெருக்கடியிலும் பொங்கல் பரிசு வழங்கி மக்களை மகிழ்ச்சி பொங்கச் செய்த முதல்வருக்கு நன்றி - பாராட்டு!**

# அவசியமற்ற ஆளுநர் பதவியை அகற்றிடுக!

## சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2–வது மாபெரும் எழுச்சி மாநாட்டில் தீர்மானம்!.... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

**தீர்மானம் 6**

**நாளைய தலைமுறையை வளர்த்தெடுக்கும் நான் முதல்வன் - புதுமைப் பெண் திட்டங்கள்!**

திராவிட மாடல் ஆட்சியில் சிறந்து விளங்கும் உயர் கல்வியினை மேலும் செழுமைப்படுத்திடும் வகையில், 'நான் முதல்வன்' எனும் திட்டத்தின் வாயிலாக மாணவமணிகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழில் மற்றும் உயர் தர வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சி ஆகியவற்றை அளித்து, 26 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவமணிகள் கடந்த இரண்டரை ஆண்டுகளில் பலன் பெறச் செய்ததுடன், அரசுப் பள்ளியில் பயின்ற மாணவிகளின் கல்லூரிக் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் 'புதுமைப் பெண்' திட்டத்தினைச் செயல்படுத்தி, இதுவரை 2 லட்சத்து 11 ஆயிரத்து 506 மாணவியருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கி அவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 7**

**மக்களின் உயிர்காக்கும் மருத்துவத் திட்டங்கள்!**

மக்களின் நல்வாழ்வினை உறுதி செய்திடும் வகையில், தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை மாநகரம் முதல் குக்கிராமம் வரை மேம்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில் மருத்துவக் கட்டமைப்பு மேலும் மேம்படுத்தப் பட்டிருப்பதுடன் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் வாயிலாக ஒரு கோடிக்கும் அதிகமானவர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்படுவது, விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்றும் 'இன்னுயிர் காப்போம்' திட்டத்தின் வாயிலாக, விபத்து ஏற்பட்ட 48 மணி நேரத்திற்குள் உயிர் காக்கத் தேவைப்படும் சிகிச்சைக்கான செலவை அரசே ஏற்கும் என அறிவித்து, 2 இலட்சம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கும் மனிதநேய முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 8**

**நிதி நெருக்கடியிலும் மகிழ்ச்சிப் பொங்க வைத்த பொங்கல் பரிசுத் தொகுப்பு!**

தமிழர் திருநாள் என திராவிட இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழர்களின் பண்பாட்டு விழாவான பொங்கல் நன்னாளினை தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் அரிசி, சர்க்கரை, முழுக்கரும்பு அடங்கிய தொகுப்புடன் 2 கோடியே 19 இலட்சத்து 71 ஆயிரத்து 113 அரிசி அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசாக ரூ.1,000 வழங்கி, மாநில அரசின் கடுமையான நிதி நெருக்கடிச் சூழலிலும் மக்களின் முகங்களில் மலர்ச்சியை ஏற்படுத்தி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிற நமது முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 9**

**வரலாறு காணாத மழையிலும் மக்களைக் காத்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!**

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலும் அருகில் உள்ள மாவட்டங்களிலும், தென்தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களிலும் கடந்த 2023 டிசம்பர் மாதத்தில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பெய்த வரலாறு காணாத மழையினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என இந்திய ஒன்றிய பிரதமரிடம் முதலமைச்சர் நேரில் கோரிக்கை வைத்தும் புறக்கணிக்கப்பட்ட சூழலில், தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு உரிய அளவில் பேரிடர் நிதி எதுவும் வழங்காத நிலையிலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் துயர் துடைக்கும் வகையில் மாநில அரசின் நிதியிலிருந்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா 6,000 ரூபாய் வழங்கிய கருணையுள்ளம் கொண்ட கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு, தனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் 10**

**நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞரின் இலட்சிய வழி நடப்போம்!**

நவீனத் தமிழ்நாட்டின் சிற்பியாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும் கொண்டாடும் வகையில், பல்வேறு குழுக்களை அமைத்து, பன்முக ஆற்றல் கொண்ட தலைவர் கலைஞரின் புகழுக்குப் பெருமை சேர்க்கும் விழாக்களை நடத்தி வருவதுடன், சென்னை, கிண்டியில் கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை, திருவாரூரில் கலைஞர் கோட்டம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், சென்னை கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், மதுரை அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் என தமிழ்நாடெங்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ்போற்றும் நிலையான அமைப்புகளை உருவாக்கித் தந்துள்ள முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு தனது நன்றியினை உரித்தாக்கி, முத்தமிழறிஞர் ஊட்டிய மொழி இன உணர்வுடன் இளைஞர் அணி தன் பயணத்தைத் தொடரும் என்ற உறுதியினை வழங்குகிறது.

**தீர்மானம் 11**

**தமிழ்நாட்டை முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக்கிய முதலமைச்சர்!**

முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் வீழ்ச்சியடைந்த தமிழ்நாட்டின் பொருளாதாரம் மற்றும் தொழில் முதலீடுகளை மீட்டெடுக்கும் முயற்சியாக, கடந்த இரண்டாண்டுகளில் மிகப் பெரிய அளவில் முதலீடுகளையும் தொழிற்சாலைகளையும் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்ததுடன், தமிழ்நாடு உலக முதலீட்டாளர் மாநாடு 2024ஐ வெற்றிகரமாக நடத்தி, 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும், மாநிலத்தின் பல பகுதிகளிலும் பரவலான முதலீடுகள் பெருகவும், பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைத்திடவும் வழிவகைக் கண்டு, ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை நோக்கி, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழ்நாட்டைப் புதிய பாய்ச்சலுடன் முன்னேறிடச் செய்யும், முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

> “தமிழ்நாட்டு இளைஞர்கள், இளம்பெண்கள் ஆகியோரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், மாவட்டங்கள் தோறும் விளையாட்டரங்குகள், போட்டிகள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக மேற்கொண்டு வரும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் அயராத முயற்சிகளை இம்மாநாடு பாராட்டுவதுடன், உலகளாவிய போட்டிகளில் பதக்கம் வெல்லக்கூடிய வகையில், தமிழர்களை ஊக்குவிக்கும் பயிற்சிகளை கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.”

**தீர்மானம் 12**

**இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக தமிழ்நாட்டை மாற்றிவரும் அமைச்சர்**

செஸ் ஒலிம்பியாட் முதல், கேலோ இந்தியா வரை தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக்கும் வகையில் பன்னாட்டுத் தரத்துடன் பல போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி வருவதுடன், தமிழ்நாட்டு இளைஞர்கள் இளம்பெண்கள் ஆகியோரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், மாவட்டங்கள் தோறும் விளையாட்டரங்குகள், போட்டிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக மேற்கொண்டு வரும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் அயராத முயற்சிகளை இம்மாநாடு பாராட்டுவதுடன், உலகளாவிய போட்டிகளில் பதக்கம் வெல்லக்கூடிய வகையில், தமிழர்களை ஊக்குவிக்கும் பயிற்சிகளை கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 13**

**உயிர்பலி நீட் நுழைவுத் தேர்வை ஒழிக்கும் வரை போராட்டம் ஓயாது!**

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைத்துத் தங்கை அரியலூர் அனிதா முதல் சென்னை ஜெகதீஸ்வரன் வரை 22 உயிர்களைப் பறித்துள்ள நீட் தேர்வு, ராஜஸ்தான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பல மாணவர்களின் உயிர்களைப் பறித்து வருவதுடன், ஒன்றிய பா.ஜ.க அரசின் ஆதரவு பெற்ற பயிற்சி நிறுவனங்கள், ஒவ்வொரு மாணவரிடமும் லட்சக்கணக்கில் கட்டணம் வசூலித்து கொள்ளை லாபம் அடைவதற்கு மட்டுமே துணை போகிறது என்பதால், நீட் தேர்வை ரத்து செய்யும் வரை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடும் என்கிற உறுதியினை வழங்கி, 2021 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க அளித்த வாக்குறுதியின்படி, நீட் தேர்வை ரத்து செய்யும் சட்ட முன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களின் பேராதரவுடன் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு இரண்டு முறை நிறைவேற்றியும், ஜனநாயக மாண்புகளை மதிக்காமல் செயல்பட்ட தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், நீட் விலக்கு கோரி தமிழ்நாடு முழுவதும் 2023 ஆகஸ்ட் 20 அன்று உண்ணா நிலை அறப்போரை முன்னெடுத்த இளைஞர் அணி, அதனைத் தொடர்ந்து நீட் விலக்குநம் இலக்கு என்ற முழக்கத்துடன் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் முதல் கையெழுத்துடன் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நேரடியாகவும் ஆன்லைனிலும் நடத்தி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 50 இலட்சம் கையெழுத்துகளுக்கும் அதிகமாகப் பெற்று மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றிக் காட்டியுள்ள நிலையில், நீட் ஒழிக்கப்படும்வரை ஜனநாயக முறையிலான போராட்டங்களையும், சட்ட வழியிலான போராட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுத்து, மாணவர்களின் எதிர்காலத்தைப் பலி கொடுக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கொடூர மனப்பான்மையை இந்திய அளவில் அம்பலப்படுத்தி, நீட் தேர்வு ஒழிப்பில் இறுதி வெற்றியை முழுமையாகப் பெற்றே தீரும் என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 14**

**குலக்கல்வி முறையைப் புகுத்தும் தேசியக் கல்விக் கொள்கையை எதிர்த்துப் போராட்டம்**

தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பு என்பது தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கல்வி வரை சிறந்து விளங்குவதுடன், தர வரிசையில் இந்தியாவின் முதல் 100 உயர் கல்வி நிறுவனங்களில் 18 தமிழ்நாட்டைச் சேர்ந்தவையாக இருப்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. உயர்கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் (ஜி.இ.ஆர்.) 51.4 விழுக்காடாக உள்ளது. இது இந்திய சராசரி அளவைவிட மிக அதிகமாகும். இத்தகைய கல்விப்புலம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள நிலையில், தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரால் தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பைச் சிதைப்பது, இந்தி சமஸ்கிருத மொழிகளைத் திணிப்பது, தொழிற்கல்வி என்ற பெயரிலும் விஸ்வகர்ம யோஜனா என்ற பெயரில் குலக் கல்வி முறையைக் கொண்டு வருவதும் சமூக நீதிக்கு முற்றிலும் எதிரானது என்பதால், தேசிய கல்விக் கொள்கையைக் கழக இளைஞர் அணி முழுமையாக எதிர்ப்பதுடன், தமிழ்நாட்டில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும் தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப் படுத்தும் போக்கை எதிர்த்து மாணவர் இளைஞர் அமைப்புகளுடன் இணைந்து நாடு தழுவிய அளவிலான போராட்டங்களை இளைஞர் அணி முன்னெடுக்கும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

> “தமிழ்நாடெங்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ்போற்றும் நிலையான அமைப்புகளை உருவாக்கித் தந்துள்ள முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு தனது நன்றியினை உரித்தாக்கி, முத்தமிழறிஞர் ஊட்டிய மொழி, இன உணர்வுடன் இளைஞர் அணி தன் பயணத்தைத் தொடரும் என்ற உறுதியினை வழங்குகிறது.”

**தீர்மானம் 15**

**மாநிலப் பட்டியலுக்குக் கல்வி மருத்துவத்தை மாற்றுக!**

நீட் தேர்வு, முதுநிலை மருத்துவப் படிப்பில் அகில இந்திய இடங்களுக்கான இடஒதுக்கீடு, தேசிய கல்விக் கொள்கை வாயிலாக இந்தி ஆதிக்கம் என பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வி வரை அனைத்திலும் ஒன்றிய அரசின் ஆதிக்கம் நீடிப்பது என்பது அந்தந்த மாநிலத்தின் மொழி பண்பாடுதிறன் மேம்பாடு ஆகியவற்றைச் சிதைக்கும் நோக்கத்தில் இருப்பதாலும், இது ஜனநாயக நெறிமுறைகளுக்கு நேரெதிரானது என்பதாலும், பொதுப்பட்டியலில் உள்ள கல்வியையும் மருத்துவத்தையும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றிட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அதற்கான சட்ட வழிமுறைகளை இளைஞர் அணி முன்னெடுக்கும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## ஜம்மு - காஷ்மீருக்கு மீண்டும் மாநிலத் தகுதி வழங்க வேண்டும்!

**தீர்மானம் 16**

**முதலமைச்சரே பல்கலைக்கழக வேந்தர்**

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் உயர்கல்வியிலும் ஆராய்ச்சிக் கல்வியிலும் தனித்துவத்துடன் திகழ்ந்து வரும் நிலையில், பல்கலைக் கழகங்களின் வேந்தர் பொறுப்பு ஒன்றிய பா.ஜ.க. அரசினால் நியமிக்கப்படும் ஆளுநர்களின் தன்னிச்சையான போக்கினால் பெரும் பாதிப்புக்குள்ளாவதுடன், ஊழல் புகார்களும் காவிமயமாக்கும் தன்மையும் அதிகரித்து வருகின்றன கல்வியில் மதவாதம் வெறுப்புணர்வு, நிர்வாகத்தில் ஜனநாயக விரோதம்ஊழல் ஆகியவைத் தொடர்ந்து கொண்டிருப்பதால், தமிழ்நாட்டின் செம்மையான உயர்கல்வி ஆராய்ச்சிக் கல்வி நீடித்திட, பல்கலைக் கழக வேந்தர் எனும் உயர் பொறுப்புக்கு, நியமனப் பதவியில் உள்ள ஆளுநருக்குப் பதிலாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முதலமைச்சரே தகுதியானவர் என்பதால், பல்கலைக்கழக வேந்தராக முதலமைச்சர் அவர்கள் செயல்படுவார் என்கிற தமிழ்நாடு அரசின் சட்ட முன்வடிவை இளைஞர் அணி ஆதரிப்பதுடன், அதனை விரைந்து நிறைவேற்றிட, இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 17**

**ஆளுநர் பதவியை நிரந்தரமாக அகற்றிடுக!**

மக்களாட்சியின் மாண்பு என்பது ஜனநாயகப் பூர்வமான தேர்தல் களத்தில் வாக்காளர்களாகிய மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் வெற்றிபெற்ற மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றத்தின் சுயாட்சி மிக்கச் செயல்பாடுகளேயாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை, குறிப்பாக, பா.ஜ.க. ஆட்சியில்லாத மாநில அரசுகளை, நியமனப் பதவியான ஆளுநர் பதவியைக் கொண்டு செயல்படவிடாமல் தடுக்க முயற்சித்து, ஆளுநர்களைக் கொண்டு இணை அரசாங்கம் நடத்துவதற்குத் திட்டமிடும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோதப் போக்கினைக் கண்டிப்பதுடன், ஆளுநர் பதவி என்ற `தொங்கு சதை'யை நிரந்தரமாக அகற்றுவதே, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான தீர்வு என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 18**

**தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு வேலைகளில் தமிழர்களை நியமித்திடு!**

இந்திய ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் ஒன்றிய அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையை, முற்றிலுமாக மாற்றிய 10 ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டில் அமைந்துள்ள தென்னக ரயில்வே, என்.எல்.சி, பி.ஹெச்.இ.எல்., ஆவடி கன ரக வாகனத் தொழிற்சாலை, ராணுவ ஆடைத் தயாரிப்பு நிறுவனம், ரயில் பெட்டித் தொழிற்சாலை மற்றும் தமிழ்நாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் தேசிய வங்கிகளான இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றில் தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு, பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களைத் திட்டமிட்டுத் திணிக்கும் முயற்சியை மேற்கொண்டு வருவதன் மூலம், தமிழ்நாட்டு இளைஞர்களை வஞ்சிப்பதுடன், பிற மாநிலத்தவருடன் பகையுணர்வை வளர்க்கும் போக்கையும் மேற்கொண்டு வருவதை வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு சார்ந்த நிறுவனங்கள், அலுவலகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியான ஆண்பெண் விண்ணப்பதாரர்களுக்கே முன்னுரிமை அளித்துப் பணியிடங்களில் நியமித்திட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்களிலும் ர்இட ஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

## தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு வேலைகளில் தமிழர்களை நியமித்திடுவீர்!

**தீர்மானம் 19**

**மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் ஒன்றிய அரசுக்குக் கண்டனம்**

இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு ஆட்சிக் காலத்தில் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் பொறுப்புக்கு வந்த பிரதமர்களின் ஆட்சிக்காலங்களில் யூனியன் பிரதேசங்கள் பலவும் மாநிலங்களாகத் தகுதிபெற்றன. பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் ஜார்கண்ட், உத்தரகாண்ட், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்கள் உருவாகின. பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் தெலங்கானா மாநிலம் உருவானது. ஒவ்வொரு ஆட்சியிலும் மாநில அந்தஸ்து என்பது மதிப்பு வாய்ந்ததாக இருந்தது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில், இந்திய வரைபடத்தின் தலைப்பகுதியில் உள்ள மாநிலமான ஜம்முகாஷ்மீர் தனக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்புரிமைகளை இழந்ததுடன் மாநிலம் என்ற தகுதியையும் இழந்து, இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிளக்கப்பட்டிருக்கிறது. மாநிலத் தகுதியை ஒரு நிலப்பகுதி இழக்கும்போது, அது ஆளுநர் அல்லது துணை நிலை ஆளுநர் எனும் ஒன்றிய அரசின் நிர்வாகப் பொறுப்பின் அதிகாரத்திற்கு ஆட்படுவதும், யூனியன் பிரதே சங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைந்தால்கூட ஆளுநர்கள் அதனை ஆட்டிப்படைப்பதையும் அருகிலுள்ள புதுச்சேரி உள்படப் பல யூனியன் பிரதேசங்களில் பார்க்கிறோம். எனவே, ஜம்முகாஷ்மீருக்கு மீண்டும் மாநிலத் தகுதி வழங்கப்பட வேண்டும் என்றும், மாநிலங்களை நகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும் ஒன்றிய பா.ஜக. அரசின் வல்லாதிக்கப் போக்கைக் கண்டித்தும் இந்த மாநில உரிமை முழக்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**தீர்மானம் 20**

**கலைஞரின் மாநில சுயாட்சித் தீர்மானத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கிடுக!**

மாநிலங்களின் ஒன்றியமாகத் திகழும் இந்தியா, உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நோக்கி முன்னேற வேண்டுமென்றால், மாநில அரசுகள் வலிமை கொண்டவையாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன் 1969ஆம் ஆண்டு முதன் முதலாக முதலமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நீதியரசர் ராஜமன்னார் தலைமையிலான குழுவை அமைத்து, அதன் பரிந்துரைகளைப் பெற்று, ஆலோசனைகள் மேற்கொண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1974ஆம் ஆண்டில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து இந்தியாவின் பல மாநிலங்களிலும் மாநில சுயாட்சிக்கான குரல் ஒலித்து வருகிறது. கூட்டாட்சி அடிப்படையிலான இந்திய ஒன்றிய அரசு, சுயாட்சிமிக்க மாநில அரசுகள் என்பதே ஜனநாயகத்தை வலிமைப்படுத்தும். அதிகாரக் குவிப்பைத் தகர்த்து, அதிகார பரவலாக்கத்தை முன்னெ டுக்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய மாநில சுயாட்சி தீர்மானத்தின் அடிப்படையில், தற்போதைய தேவைகளையும் இணைத்து, மாநில அரசுகளின் அதிகாரத்தை வலிமைப்படுத்திட வேண்டும் என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 21**

**அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளைக் கைப்பாவையாக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்!**

ஜனநாயக நாட்டில் மக்களின் கடைசி நம்பிக்கை சட்டமும் நீதியும்தான். புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அடையாளத்துக்காக ஒரு செங்கோலை வைத்துவிட்டு, சட்டம் நீதியின் ஆட்சி எனும் உண்மையான செங்கோலை, வில்லாக வளைத்து, அதில் தனது கைப்பாவையாக மாற்றி வைத்துள்ள அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமானவரித்துறை போன்ற அம்புகளைத் தொடுத்து, பா.ஜ.க. அல்லாத ஆட்சி நடைபெறும் மாநிலங்களில் உள்ள ஆளுங்கட்சியினர் மீதும், பா.ஜ.க.வை எதிர்க்கின்ற கட்சிகள் மீதும் வன்மத்துடன் பாய்ச்சுகின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் அரசியல் போக்கிற்கும், ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளானவர் பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலை எடுத்தால், அவர் மீதான வழக்குகளில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் 'தூய்மைப் பட்டம்' அளிக்கும் 'வாஷிங் மெஷின் பா.ஜ.க.' அரசின் இரட்டை வேட செயல்பாடுகளுக்கும் இந்த மாநாடு வன்மையானக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.

**தீர்மானம் 22**

**நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் சர்வாதிகாரத்தை ஒழித்திடுவோம்!**

ஒன்றிய ஆளுங்கட்சியின் எதேச்சதிகார செயல்பாடுகளை ஜனநாயகத்தின் உயர்ந்த இடமான நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்ட காரணத்தால், இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு, ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை நோக்கி ஒரே கூட்டத் தொடரில் 146 மக்களவை-மாநிலங்களவை எதிர்க்கட்சி உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## பா.ஜ.க.வை வீழ்த்தும் முன்கள வீரர்களாக இளைஞர் அணி செயல்படும்!

# கலைஞரின் மாநில சுயாட்சித் தீர்மானத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிகாரத்தை வலிமைப்படுத்த வேண்டும்!

## சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2-வது மாபெரும் எழுச்சி மாநாட்டில் தீர்மானம்!.... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்துள்ள பா.ஜ.க. அரசின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிப்பதுடன், 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் இத்தகைய சர்வாதிகார சக்திகளை முழுமையாக வீழ்த்திட, இந்த மாநாடு உறுதியேற்கிறது.

**தீர்மானம் 23**

**இந்துக்களின் உண்மையான எதிரி பா.ஜ.க.தான் என்பதை அம்பலப்படுத்துவோம்.**

10 ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் சமையல் சிலிண்டர் விலை, பெட்ரோல் டீசல் விலை ஆகியவற்றைக் கடுமையாக உயர்த்தி, மக்களை வாட்டி வதைப்பதும், அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வதாரத்தைப் பாதிக்கச் செய்ததுமே வேதனை மிகுந்த சாதனைகளாக இருக்கின்றன. ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்காகும் என்ற வாக்குறுதியும் நிறை வேற்றப்படவில்லை. கறுப்புப் பணத்தை ஒழிப்பதாகக் கூறி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையால், ஏழை எளிய மக்களை நடுஇரவில் நடுரோட்டில் நிறுத்திய ஒன்றிய பா.ஜக. அரசு, கறுப்புப் பணத்தையும் ஒழிக்கவில்லை, கறுப்புப் பணத்தை ஒழித்து, ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் 15 இலட்ச ரூபாய் போடுவதாகக்கூறி, சல்லிப் பைசாவையும் போடவில்லை. தனது வாக்குறுதிகள் அனைத்திலும் தோல்வியடைந்த பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு, மக்களுக்குச் செய்த துரோகங்களை மறைக்க, மதவாத அரசியலை முன்னெடுத்து, அயோத்தி இராமர் கோவிலை வைத்து வாக்குகள் பெற்றுவிடலாம் என நினைப்பது ஆன்மிகவாதிகளையும் ஏமாற்றும் செயலாகும். நாட்டில் உள்ள இந்துக்களில் பெரும்பான்மையான மக்களை 10 ஆண்டுகாலமாக ஏமாற்றிவிட்டு, இராமர் கோவிலைக் காட்டி, இந்துக்கள் ஓட்டுகளை வாங்கி விடலாம் என அரசியல் கணக்குடன், கடவுளையும் ஏமாற்ற நினைக்கும் இந்து மக்களின் உண்மையான எதிரியான பா.ஜ.க.வின் மதவாத அரசியலை வீடு வீடாக அம்பலப்படுத்தும் பரப்புரையை இளைஞர் அணி மேற்கொள்ளும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 24**

**பா.ஜ.க ஆட்சியை வீழ்த்திடும் முன்கள வீரர்களாக இளைஞர் அணி செயல்படும்!**

கலவரத் தீயில் அரசியல் குளிர்காய்வதற்காக, மக்களை விறகுக் கட்டைகள் போல எரிக்கும் தன்மையுடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுகிறது என்பதற்கு, ஆண்டுக் கணக்கில் பற்றி எரியும் மணிப்பூர் மாநிலக் கலவரமும், அந்த இடத்திற்கு இந்திய ஒன்றிய பிரதமர் அவர்கள் இதுநாள்வரை நேரில் செல்லாமல் தவிர்த்து வருவதுமே சான்றாகும். நாடு முழுவதும் மதவெறி, வெறுப்பரசியல், மாநில உரிமைகள் பறிப்பு, அரசியல் பழிவாங்கல், சிறுபான்மையினர் மனங்களில் அச்சத்தை விதைத்தல், உணவு அரசியல், நவீனத் தீண்டாமை, மொழி ஆதிக்கம் உள்ளிட்டவற்றைத் தீவிரப் படுத்தி, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் பன்முகத்தன்மைக்கும் எதிரான கொள்கைகளால் பத்தாண்டு காலம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், இந்தியாவைச் சீர்கெடச் செய்து வருவதுடன், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க. ஆட்சியை அடியோடு வீழ்த்திட, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுக்கும் தேர்தல் களங்கள் அனைத்திலும் இளைஞர் அணி முன்களப் போர்வீரர்களாகச் செயல்படும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 25**

**நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்கான சூளுரை**

சமூக நீதி, மத நல்லிணக்கம், சமத்துவம் , மாநிலங்களின் உரிமைகள்தாய்மொழி வளர்ச்சி, பரவலான பொருளாதாரக் கட்டமைப்பு, மனித உரிமை இவற்றைக் கொள்கைகளாகக் கொண்ட இயக்கங்களின் ஒருங்கிணைப்பான ‘இந்தியா’ கூட்டணியை உருவாக்குவதிலும், வழிகாட்டுவதிலும் முன்னணி பங்காற்றி வருபவரும், மனிதநேய சக்திகளை ஒன்றிணைத்தால், பாசிசத்தை வீழ்த்திக் காட்ட முடியும் என 2019 நாடாளுமன்றத் தேர்தலிலேயே தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நிரூபித்துக் காட்டியவருமான திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில், இயங்கும் கழக இளைஞர் அணி, கழகத் தலைவரின் கட்டளைக்கேற்ப 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் முன்னின்று செயலாற்றி, தமிழ்நாடு-புதுச்சேரியில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியின் வெற்றிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, ‘ஹிட்லர்களின் தோல்வி ஸ்டாலினிடம்தான்’ என்ற வரலாற்று மரபின் தொடர்ச்சியை நிரூபிக்கும் வகையில், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டும் எனச் சூளுரைக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

> **நாடு முழுவதும் மதவெறி, வெறுப்பரசியல், மாநில உரிமைகள் பறிப்பு, அரசியல் பழிவாங்கல், சிறுபான்மையினர் மனங்களில் அச்சத்தை விதைத்தல், உணவு அரசியல், நவீனத் தீண்டாமை, மொழி ஆதிக்கம் உள்ளிட்டவற்றைத் தீவிரப்படுத்தி, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் பன்முகத்தன்மைக்கும் எதிரான கொள்கைகளால் பத்தாண்டு காலம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், இந்தியாவைச் சீர்கெடச் செய்து வருவதுடன், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க. ஆட்சியை அடியோடு வீழ்த்திட, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுக்கும் தேர்தல் களங்கள் அனைத்திலும் இளைஞர் அணி முன்களப் போர்வீரர்களாகச் செயல்படும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.**

## “ஹிட்லரின் தோல்வி ஸ்டாலினிடம்தான்” என்ற வரலாற்றை நிரூபிக்க ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டுவோம்!

# இந்தியாவில் இதுவரை நடத்தப்படாத மாநாடு!

## சமூக வலைதளப் பதிவில் - கழகத் தலைவர் பெருமிதம்!



சேலம், ஜன.22-

சேலத்தில் கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில எழுச்சி மாநாடு நிறைவுற்ற பின்னர் சமூக வலைதளப் பதிவிட்ட கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இந்தியாவில் இதுவரை நடத்தப்படாத மாநாடு இது!” எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**“இந்தியாவில் இதுவரை நடத்தப்படாத மாநாடு!**

**9 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான மாநாட்டு அரங்கத்தைச் சுற்றிலும் 5 லட்சம் உடன்பிறப்புகள் கலந்து கொள்ள; மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.**

**கழகத் தோழர்கள் அனைவரும் பாதுகாப்பாக வீடு திரும்புமாறு கேட்டுக் கொள்கிறேன்!**

இவ்வாறு அப்பதிவில் - கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டிற்கு - இந்தியாவிற்கு பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும்!

## இளைஞரணி மாநாட்டிற்கு திருமதி சோனியா காந்தி - சரத்பவார் - கட்சித் தலைவர்கள் வாழ்த்துச் செய்தி!

**புதுடெல்லி, ஜன. 22-**

**தி.மு.க. இளைஞரணி மாநில மாநாடு, தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி நம்மை அழைத்து செல்லும் என்ற நம்பிக்கை உள்ளதாக காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் சோனியா காந்தி, மல்லிகார்ஜூன கார்கே, சரத்பவார் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் சோனியா காந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை வலுப்படுத்த இளைஞர்களின் பங்களிப்பிற்காக, சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முன்முயற்சியாக தி.மு.க. இளைஞரணி மாநாடு அமைந்துள்ள தாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாநில உரிமைகளை மீட்பது குறித்து ஆழமாக ஆலோசிப்பது கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு நல் வழி காட்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

கூட்டாட்சி மற்றும் ஒன்றிய - மாநில உறவுகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக மாநாடு உள்ளதாக தேசியவாத காங்கிரசின் தலைவர் சரத்பவார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மாநில உரிமை மூலம் முக்கிய அரசியல் பொறுப்பை திமுக இளைஞரணி ஏற்றுள்ளதாக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின் மதிப்புகளுக்கு மேலும் வலுசேர்க்கும் மாநாடாக திமுக இளைஞரணி மாநாடு அமையட்டும் என்று ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் வாழ்த்து கூறியுள்ளார்.

இதேபோல், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களும் திமுக இளைஞரணி மாநாட்டுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

‘தமிழ்நாட்டில் ராமர் பெயரில் பூசை செய்யத் தடை’ என - உயர்ந்த பதவியில் உள்ள

# நிர்மலா சீதாராமன் போன்றோர் பொய்ச் செய்தி பரப்புவது வருத்தத்திற்குரியது!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிக்கை!



சென்னை, ஜன.22-

“தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் ராமர் பெயரில் பூசை செய்ய, அன்னதானம் வழங்கத் தடை என உயர்ந்த பதவியில் உள்ள ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் போன்றோர் கூட பொய்ச் செய்தி பரப்புவது வருந்தத்தக்கது” என, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

சேலத்தில் எழுச்சியோடு நடைபெற்று வரும், திமுக இளைஞரணி மாநாட்டை திசைதிருப்புவதற்காக திட்டமிட்ட வதந்தி பரப்பப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் ராமர் பெயரில் பூசை செய்யவோ, அன்னதானம் வழங்கவோ, பிரசாதம் வழங்கவோ பக்தர்களுக்கு எந்தத் தடையையும் அறநிலையத்துறை விதிக்கவில்லை.

முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, உள்நோக்கம் கொண்ட பொய்ச் செய்தியை, உயர்ந்த பதவியில் உள்ள ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் போன்றோர் பரப்புவது வருத்தத்துக்குரியது!

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவதூறான பொய்ச்செய்தி வெளியிட்ட தினமலர் மீது சட்ட நடவடிக்கை!

# சிறப்பு பூஜைகள் - அன்னதானம் நடத்திட எங்கும் தடை விதிக்கவில்லை!

## தமிழ்நாடு அரசு வன்மையான கண்டனம்!

சென்னை, ஜன.22-

“சிறப்புப் பூஜைகள், அன்னதானம் நடத்திட எங்கும் தடை விதிக்கப்படவில்லை. பொய்ச்செய்தி வெளியிட்ட தினமலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ராமர் கோயிலுக்கு குடமுழுக்கு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது. அதனையொட்டி, தமிழ்நாட்டு கோயில்களில் சிறப்பு பூஜைகளும். அன்னதானமும் நடத்துவதற்கு தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை வாய்மொழியாக தடைவிதித்துள்ளது என தினமலர் நாளிதழில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஆலயப் பணிகளை அனைவரும் போற்றும் வகையில் நிறைவேற்றி வரும் தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்திடும் தீயநோக்கத்துடன் உண்மைக்கு மாறான செய்தியை வெளியிட்டு, பொதுமக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி, அரசு மீது வெறுப்பைத் தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தினமலர் நாளிதழின் இச்செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு 2021ல் பொறுப்பேற்றது முதல் இந்து சமய அறநிலையத்துறையின் பணிகளில் ஒரு சிறு குறையும் ஏற்படக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சுமார் 400 ஆண்டுகளுக்குப் பின், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில் உட்பட 1,270 திருக்கோயில்களுக்கு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் 764 திருக்கோயில்களில் நாள்தோறும் அன்னதானம் வழங்கும் பணிகள் நடைபெற்று பக்தர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

**கோவில்கள் புனரமைப்பு!**

ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்திடும் வகையில் 2022-23ஆம் நிதியாண்டில் 113 திருக்கோயில்கள் ரூ.154.90 கோடி மதிப்பீட்டிலும், 2023-24 ஆம் நிதியாண்டில் 84 திருக்கோயில்கள் ரூ.149.95 கோடி மதிப்பீட்டிலும் புனரமைத்துப் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்து சமய வழிபாட்டு உணர்வுகளில் ஊறியுள்ள தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்த உண்மை புரியும். மாற்றுக் கருத்துடைய எதிர்க்கட்சிகள் கூட இதனை மறுக்க முடியாது.

**‘தினமலர்’ மீது சட்ட நடவடிக்கை!**

இந்நிலையில் திருக்கோயில் பணிகளை மிகச்சிறப்பாக நிறைவேற்றி, நாள்தோறும் மக்களின் பாராட்டுகளைப் பெற்றுவரும் தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் வேண்டுமென்றே அப்பட்டமான உள்நோக்கத்துடன் பொய்ச் செய்தியை வெளியிட்டுள்ள செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இத்தகைய தவறான, உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்ட தினமலர் நாளிதழ் மீது தமிழ்நாடு அரசு சார்பில் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

கலைஞர் 100 1924 - 2023

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)1/2024 நாள் : 19.01.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5,6,7,8,10, 11,16,17,27,35,45,50,55, 67,71,81,83,96க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 19 பணி | 06.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 07.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 037/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 20.01.2024


ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமை ! பெரம்பூர் தெற்குப் பகுதி

# வழக்கறிஞரணி ஜி.மோகன்ராஜ் மணவிழா வரவேற்பு! ஆர்.எஸ். பாரதி வாழ்த்துரை!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சிவ.வீ. மெய்யநாதன், தா.இளையஅருணா எம்.சி. பங்கேற்பு!



சென்னை, ஜன. 22 -

சென்னை வடக்கு மாவட்டம்,மொழிப்போர் தியாகி மறைந்த எம். செல்லன், சி.குப்பம்மாள் ஆகியோரின் பேரனும், மறைந்த எம்.சி. குணசேகர்,திருமதி எழிலரசி ஆகியோரின் மகனும், பெரம்பூர் தெற்கு பகுதி வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளருமான ஜி.மோகன்ராஜுக்கும் புதுச்சேரி மாநிலம் எம். சங்கர்,வேல்விழி ஆகியோரின் மகள் எஸ்.சுருதிக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (22.1.2024 திங்கட்கிழமை) மாலை 6.00 மணிக்கு மேல் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,சச்சிதானந்தம் தெருவில் அமைந்துள்ள ‘அறிஞர் அண்ணா’ திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் தலைமை ஏற்கிறார்.

க.ஜெயராமன், அ.முருகன், எஸ்.ஆனந்தி, வி.முருகன்,வி.வேதா, சு.மனோகர், வை.கௌதமன், ஜெ.காணிக்கை நாதன், ஜி.கணேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.டி.மணிமாறன், ஜி. ஜெயகுமார், ச.ராஜன்,ஆர். சீதா, ஆர்.ரகு, பி.கிருஷ்ணமூர்த்தி, இ.கர்ணா,கே.பிரசாத், எம்.ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன், ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

விழாவில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,

அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, சிவ.வீ.மெய்யநாதன், மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கலாநிதி வீராசாமி எம்.பி, என்.ஆர்.இளங்கோ எம்.பி,இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன், இரா.கருணாநிதி, சொ.வேலு, இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், எ. தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன், டி.கமலக்கண்ணன், க.அமுல், என்.மருதுகணேஷ், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி,சர்பஜெயதாஸ் எம்.சி,க.சர்மிளாகாந்தி எம்.சி,த.ஆறுமுகம், ஆர்.எஸ். மனோகரன், கேபிள்.கே. தினகரன், க.பாபு, ஜி.மாரிமுத்து, கே.வி.ராஜன், மு. உமாபதி, கே.இ.செந்தமிழரசு, இரா.அரிதாஸ், சி. எஸ்.இரவி, என்.கார்த்தீபன் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

செ.மா.சேகர், எம்.சி.தில்குமார், ஜி.சங்கர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



இளைஞர் அணி மாநில மாநாட்டில் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்குகிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!



கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்களுக்கு – கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கியபோது!



இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டின் மகத்தான வெற்றிக்கு ஒல்லும் வகையினாலெலாம் பாடுபட்ட மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் – தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்து, நன்றி தெரிவித்தபோது எடுத்தபடம்!







கழக இளைஞர் அணி 2–வது மாநில மாநாட்டில் சிறப்புத் தலைப்புகளில் சொற்பொழிவாற்றிய கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி., அமைச்சர் தங்கம் தென்னரசு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோருக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கவுரவித்த காட்சிகள்!






கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டைத் திறந்துவைத்த – கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் சேலம் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர். சிவலிங்கம், இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., டி.எம். செல்வகணபதி ஆகியோருக்குப் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

## இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் சிறப்புத் தலைப்புகளில் சீரிய உரை நிகழ்த்திய கருத்துப் போராளிகளுக்கு, இளைஞர் அணிச் செயலாளர் சிறப்புச் சேர்த்திடும் காட்சி!




















கழக இளைஞர் அணி மாநில மாநாட்டின் நிறைவுப் பேருரையாற்றும் முன், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கிய காட்சி! அருகில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் உள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், இளைஞர் அணி சார்பாக, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசாக செங்கோலினை வழங்கினார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2–ஆவது மாநில மாநாட்டில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு அமைத்திருந்த புகைப்பட கண்காட்சியை அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். இக்கண்காட்சியில் 1980–ல் இளைஞர் அணி தொடங்கப்பட்டதிலிருந்து 2023 வரை இளைஞர் அணியின் செயல்பாடுகள் குறித்த அரிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன. இந்த கண்காட்சியை கடந்த இரண்டு நாட்களாக 80 ஆயிரம் பேர் கண்டுகளித்துள்ளனர்.




கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் – கழக இளைஞரணிச் செயலாளருக்கும், மாநாட்டின் ஒருங்கிணைப்பாளரும், கழக முதன்மைச் செயளலாளருமான – அமைச்சர் கே.என்.நேரு, வெள்ளி வீரவாளும், வெள்ளிக் கேடயமும் வழங்கிய காட்சி!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், நீட் தேர்விற்கு எதிரான 85 இலட்சம் "நீட் விலக்குநம் இலக்கு கையெழுத்து படிவங்களை குடியரசு தலைவரிடம் ஒப்படைப்பதற்காக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




மாநாட்டில் – கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் – அமைச்சர் கே.என்.நேரு, மலர் மாலைகள் அணிவித்து கவுரவித்த காட்சி.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்ற (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், மாநாட்டு மலரினை வெளியிட்டார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



இளைஞர் அணி மாநில மாநாட்டில் - திருமதி சாந்தா ஸ்டாலின் அவர்களும், முதல்வர் அவர்களின் குடும்பத்தினரும் பங்கேற்ற காட்சி!

## அலை அலையென லட்சோப இலட்சம் பேர் திரண்டனர்!

# சேலத்தைக் குலுக்கிய இளைஞர் அணி எழுச்சி மாநாடு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி - பாராட்டு!

## மாநாட்டுத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் 25 தீர்மானங்களை நிறைவேற்றினார்!

**சேலம், ஜன. 22-**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று, முன்னின்று நடத்திய, "தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு" மாநில உரிமை மீட்பு முழக்க மாநாடாக, நேற்று (ஜனவரி 21 - 2024 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் - பெத்த நாயக்கன் பாளையத்தில் எழுச்சியும் உணர்ச்சியும் நிறைந்ததாக மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது.**

**இந்த இளைஞர் அணி மாநாட்டில் அலை அலையென திரண்ட இலட்சோப இலட்ச இளைஞர் அணி செயல்வீரர்களால் சேலம் மாநகரமே குலுங்கியது.**

**'இளைஞர் அணி' எனும் கழகத்தின் ஈடு இணையற்ற அமைப்பை, ஊண் உறக்கம் மறந்து, இத்தனை ஆண்டுகளாய் தம் தோளில் சுமந்து, அதன் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும், அசைவிலும் தமது பேருழைப்பைச் சிந்தி நெறிப்படுத்தி வளர்த்தெடுத்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றினார்! அப்பேருரையில் இளைஞர் அணி எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகளுக்கு வியூகங்கள் வகுத்தளித்தார்.**

**முன்னதாக கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையும் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் வாழ்த்துரையும் - கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள், 'மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்' உரையும் நிகழ்த்தினர். கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கழகக் கொடியேற்றி வைத்து உரையாற்றினார்.**

**மாநாட்டில் பல்வேறு சிறப்புக்குரிய தலைப்புகளில் கழக முன்னோடிகளும், கழகத்தின்பால் பேரன்பு கொண்ட பெருமக்களும் சீர்மிகு உரையாற்றினர்.**

**இம்மாநாட்டில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு சமூக நீதி உள்ளிட்ட கொள்கைகளை பறைசாற்றும் 25 வரலாற்று தீர்மானங்களை கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் படித்த அத்தீர்மானங்கள் லட்சோப லட்ச இளைஞர்கள் மக்களின் கரவொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.**

**இம்மாநாட்டிற்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி உள்ளிட்ட பல்வேறு தேசிய கட்சித் தலைவர்கள் முன்னணியினர் வாழ்த்துத் தெரிவித்து இருந்தனர்.**

இம்மாநாடு பற்றிய விபரம் வருமாறு:-

"தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு" நேற்று (ஜனவரி 21 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் - பெத்த நாயக்கன்பாளையத்தில் நடை பெற்றது.

மாநாட்டுப் பந்தலுக்கு - 'தந்தை பெரியார்' பெயரில் நுழைவாயில்,

திடலுக்குப் பெயரோ, அண்ணா திடல்,

கலைஞர் அரங்கம்,

பேராசிரியர் மேடை,

வீரபாண்டியார் கொடி மேடை,

முரசொலி மாறன் புகைப்படக் கண்காட்சி,

வீரபாண்டி ஆ.ராஜா, வீரபாண்டி செழியன், சந்திரசேகர், 'நீட்' போராளிகள் அனிதா மற்றும் தனுஷ் ஆகியோர் பெயர்களால் தோரண வாயில்கள் என, - மாநாட்டின் ஒவ்வொரு ஏற்பாடும் உணர்ச்சியும், பொருளும் மிக்கதாய் அமைக்கப்பட்டிருந்தது.

காலை 9.00 மணியளவில் கழகக் கொடியேற்றலுடன் மாநாடு தொடங்கியது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், கழகக் கொடியினை ஏற்றிவைத்தார்.




பின்னர், மாநாட்டு திடலில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவ சிலைகளை திறந்துவைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

இம்மாநாட்டில் வரலாற்று சிறப்பு மிக்க கொள்கை விளக்க 25 தீர்மானங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு தீர்மானமாக படித்திட 25 தீர்மானங்கள் நிறைவேற்றும் வகையில் மாநாட்டில் குழுமி இருந்த லட்சோப லட்ச - இளைஞர் அணியினர் - கழகத்தினர் - பொதுமக்கள் கரவொலி எழுப்பி தீர்மானங்களை வரவேற்றிட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் வரவேற்புரையாற்றினார்.

**மாநாட்டுத் திறப்பாளர் உரை!**

காலை 9.45 மணியளவில் - இம்மகத்தான மாநாட்டின் தலைவராக, இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முன்மொழிதலும் வழிமொழிதலும் நடைபெற்றது.

காலை 10.00 மணியளவில், கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள், 'மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்' உரை நிகழ்த்தினார்.

10.15 மணியளவில் - அரசு கொறடா கோவி.செழியன், மொழிப்போர்த் தியாகிகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

10.30 மணியளவில், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., 'மாநாட்டுத் திறப்பாளர்', உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வுகளை அடுத்து காலை 11.00 மணிக்குத் தொடங்கி, மாலை 6.00 மணிவரை, உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க பல்வேறு தலைப்புகளில் 'சொற்பொழிவரங்கம்" நடைபெற்றது. இதில்

**இளைஞர் அணி கண்ட களங்கள் -**
**திருச்சி என்.சிவா எம்.பி.,**

**திராவிட மாடல் - எல்லோருக்கும் எல்லாம் -**
**ஆ.ராசா எம்.பி.,**

**நிதித்துறையில் மாநில உரிமைகள் பறிப்பு-**
**அமைச்சர் தங்கம் தென்னரசு**

**தமிழ்நாட்டின் கல்விப் புரட்சி -**
**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

**மொழிப்போர் - இந்தித் திணிப்பு எதிர்ப்பு -**
**கம்பம் செல்வேந்திரன்**

**திராவிட இயக்க முன்னோடிகள் -**
**முனைவர் சபாபதி மோகன்**

**கலைஞர் பாதையில் நம் தலைவர் -**
**திண்டுக்கல் ஐ.லியோனி**

**மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி -**
**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்**

**திராவிடம் சொல்லும் மனிதநேயம் -**
**வே.மதிமாறன்**

**பத்திரிகையும் திராவிட இயக்கமும் -**
**கோவி லெனின்**

**நீட் விலக்கு நம் இலக்கு -**
**வழக்கறிஞர் ராஜீவ் காந்தி**

**பெரியாரும் பெண் விடுதலையும் -**
**வழக்கறிஞர் செ.ம.மதிவதனி**

**தாயுமானவர் நம் தலைவர் -**
**திருமதி செ.கனிமொழி**

### கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு:

## நாளைய வெற்றிக்கு நமக்கு ஊக்கமளிக்கட்டும்! புதிய வரலாறு படைக்கப் புறப்படுவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சேலம், ஜன. 21-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.01.2024), வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**"இன்று சேலம் கழக இளைஞர் அணி மாநாட்டில் தங்கை கனிமொழி ஏற்றி வைத்துள்ள நம் கழகக் கொடியும், மாநாட்டு அரங்கில் அதிரும் கொள்கை முழக்கங்களும் நாளைய வெற்றிக்கு நமக்கு ஊக்கமளிக்கட்டும்! புது வரலாறு படைக்கப் புறப்படுவோம்!"**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



**வழக்கறிஞர் அருள்மொழி**

**தலைவர் ஆட்சியில் தொழில்புரட்சி -**
**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**

**கலைஞர் - ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் ஒளிவிளக்கு -**
**அமைச்சர் மதிவேந்தன்**

**கலைஞரின் பேனா -**
**கரு பழனியப்பன்**

**கழக ஆட்சியில் திறன் மேம்பாடும் வேலை வாய்ப்பும் -**
**எம்.எம்.அப்துல்லா எம்.பி.,**

**மருத்துவக் கட்டமைப்பு - இந்தியாவின் முன்னோடி தமிழ்நாடு -**
**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**

**இலக்கியமும் தி.மு.க.வும் -**
**மனுஷ்யபுத்திரன்**

**அவதூறுகளை அடித்து நொறுக்கிடும் கழகம் -**
**வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா**

**சமூக நீதி -**

**திருநர் வாழ்வில் திராவிட அரசு -**
**முனைவர் ரியா**

ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**மாநாட்டுத் தலைவர் உரை!**

மாலை 6.30 மணியளவில், இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வண்ணம் இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை நடத்தி வாகை சூடும் - கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநாட்டுத் தலைமையுரையாற்றினார்.

மாநாட்டுத் தலைவர் உரையைத் தொடர்ந்து - கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றி னார்.

மாநாட்டின் முத்தாய்ப்பாக, கழகத் தலைவர் - 'திராவிட மாடல்' எனும் தீந்தமிழ் ஆட்சியின் நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றினார்.

கழகத் தலைவரின் உரையை அடுத்து - சேலம் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மருத்துவர் வீரபாண்டி ஆ.பிரபு நன்றியுரையாற்றினார்.

இம்மாநாட்டு நிகழ்வுகளை, நிகழ்ச்சி நிரலை - தி.செந்தில்வேல், திவ்யா நாதன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

**பல்வேறு சிறப்பு நிகழ்வுகள்!**

இம்மாநாட்டில் - மேற்கூறிய நிகழ்வுகளன்னியில்,

மாநாட்டு மலர் வெளியீடு,

கழக முன்னோடிகளுக்கு மரியாதை,

"நீட் விலக்கு நம் இலக்கு"

அஞ்சல் அட்டை ஒப்படைப்பு

புதுகை பூபாளம் கலைக்குழு,

பாடகர் திரு தெருக்குறள் அறிவு இசை நிகழ்ச்சி -

ஆகிய, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுக்கும் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, திமுக முதன்மை செயலாளர் கே. என்.நேரு, துணை பொதுச்செயலாளர்கள் இ.பெரியசாமி, பொன்முடி, கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞரணி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட லட்சோப லட்சம் பேர் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

மாநாட்டு மேடையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட திராவிடஇயக்கத்தலைவர்களின்திருவுருவப் படங்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

**சேலம் மாநாடு**
**விழாக் கோலம்!**

சேலத்தில் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு நடைபெறுவதை முன்னிட்டு சேலம் மாநகரம் எங்கும் கழக இளைஞர் அணித் தோழர்கள் வெண் சீருடையில் அணிவகுத்த காட்சிகளே தென்பட்டன. சேலம் மாநகரம் எங்கும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படங்கள், வண்ண விளக்குகளால் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தன.

மேலும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் திருவுருவப் படங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டு இருந்தன.

மாநாட்டு முகப்பில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் உருவங்கள் எழிலார்ந்த முறையில் அமைக்கப்பட்டு இருந்தன.

**லட்சோப லட்ச மக்கள்**
**திரண்டனர்!**

பரந்து விரிந்த மாநாட்டு பந்தலே கொள்ளாத அளவிற்கு மாநாட்டு பந்தலுக்கு வெளியேயும் மக்கள் லட்சக் கணக்கில் திரண்டிருந்த மாநாட்டிற்கு பெருமை சேர்த்தனர்.

மொத்தத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னின்று நடத்திய கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு தி.மு.கழக வரலாற்றில் - தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## டெல்லியில் வீற்றிருக்கும் பாசிஸ்ட்டுகளை விரட்டியடிக்க உழைத்திடுவோம்!

# இந்தியா முழுவதும் காவிச் சாயம் பூச நினைப்பவர்களை வீழ்த்திடுவோம்!

## சேலத்தில் - கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டிற்குத் தலைமை வகித்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உணர்ச்சி உரை!

**சேலம், ஜன. 22 -**

**சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2 ஆவது மாநில மாநாட்டிற்கு தலைமை வகித்து கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது "டெல்லியில் வீற்றிருக்கும் பாசிஸ்ட்டுகளை விரட்டி யடிப்போம், இந்தியா முழுவதும் காவிச் சாயம் பூச நினைப்பவர்களை வீழ்த்துவோம்!" என உணர்ச்சி மேலிடக் கூறினார்.**

கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. இந்த மாநாட்டை தலைமையேற்று நடத்திய கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையுரை வருமாறு:-

"மாநில உரிமை மீட்பு முழக்கத்தை முன்வைத்து பெருமைமிகு நம் கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை நடத்துகின்ற வாய்ப்பை நமக்கு தந்திருக்கக் கூடிய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுவும் கலைஞரின் நூற்றாண்டில், கழகத்தின் பவள விழாவில் இந்த மாநாடு நடைபெறுகின்றது. இந்த நேரத்தில் நாம் அனைவரும் இளைஞர் அணியில் இருப்பதே, நமக்கு ஒரு மிகப்பெரிய பெருமை. அதுபோல, கழகப் பொதுச்செயலாளர் அவர்களுக்கும், கழகப் பொருளாளர் அவர்களுக்கும், கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### மாநாடு என்றால் நேரு, நேரு என்றால் மாநாடு

இந்த மாநாட்டுப் பணிகளுக்காக கடந்த ஆறு மாதகாலமாக இரவு பகல் பார்க்காமல் உழைத்த மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். `மாநாடு என்றால் நேரு, நேரு என்றால் மாநாடு' என்று கலைஞர் அவர்களால் பல முறை பாராட்டப்பெற்றவர்தான் அண்ணன் நேரு அவர்கள்.

எப்பொழுது நம்முடைய தலைவர் அவர்கள் மாநாட்டை ஒருங்கிணைக்கின்ற அந்தப் பணியை அண்ணன் நேரு அவர்களிடம் ஒப்படைத்தாரோ, அப்போதே நான் சொன்னேன், 50 சதவிகிதம் மாநாட்டின் வெற்றி முடிவாகிவிட்டது என்று. இன்றைக்கு உங்களுடைய இந்த எழுச்சியால், அது 100 சதவிகித வெற்றியை அடைந்திருக்கிறது. அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாநாட்டில் காலை நம்முடைய கழகத்தின் கொடியை ஏற்றிவைத்து இங்கே என்னை பாராட்டி பேசிய கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அத்தை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், மாணவர் அணிச் செயலாளர் சகோதரர் எழிலரசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### திரண்டு வந்த இளைஞர் அணிப் படை!

இந்த மாநாட்டுத் திடலைப் பார்த்துப் பார்த்து உருவாக்கித் தந்த சேலம் மாவட்ட கழகச் செயலாளர்கள் அண்ணன் ராஜேந்திரன் அவர்கள், அண்ணன் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள், அண்ணன் செல்வகணபதி அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். `சேலத்துச் சிங்கம்' அண்ணன் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் மண்ணில் நடக்கக்கூடிய இந்த மாநாட்டில் அதே வீரத்துடன் நம்முடைய இளைஞர் அணி படை இங்கு திரண்டு இருக்கிறது.

இந்த மாநாட்டை வெற்றி மாநாடாக்கிய அத்தனை மாவட்டக் கழக செயலாளர்களுக்கும், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகளுக்கும், எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக, நீங்கள் அத்தனை பேரும் அளித்த அந்த மாநாட்டு நிதிதான் இந்த மாநாட்டை இவ்வளவு சீரும், சிறப்புமாக நடைபெற உறுதுணையாக இருந்துள்ளது.

### 22 தலைப்புகளில் பேச்சாளர்கள் உரை!

இன்றைக்கு ராமேஸ்வரத்தில் ஒருவர் இருக்கிறார். 22 கிணற்றில் நீராடி விட்டு, ராமநாதசுவாமியைப் பார்க்க போய் கொண்டிருக்கிறார். ஆனால், இங்கு நாம் மாநில உரிமைக் காக்க, 22 தலைப்புகளில் நம்முடைய பேச்சாளர்கள் ஆற்றிய உரை, நம்முடைய கிழவன் ராமசாமியை நோக்கி அமைந்துள்ளது.

22 தலைப்புகளில் உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், திராவிட இயக்கச் சிந்தனையாளர்கள் அத்தனைப் பேருக்கும் என்னுடைய நன்றி.

அதேபோல் கொள்கை சார்ந்த கலை நிகழ்ச்சிகளை நடத்திய அண்ணன் இறையன்பன் குத்தூஸ் அவர்களுக்கும், புதுகை பூபாளம் கலைக்குழுவினருக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முக்கியமாக இந்த மாநாட்டுப் பணிகளில் என்னோடு தோள் நிற்கின்ற மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, பிரகாஷ், அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், சீனிவாசன், ஜி.பி.ராஜா, ஆனந் தகுமார் உள்ளிட்ட அனைத்து துணை செயலாளர்களுக்கும் இளைஞர் அணியினுடைய அனைத்து நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல் சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் வீரபாண்டி பிரபு, மணிகண்டன், அருண் பிரசன்னா, மாநகர அமைப்பாளர் கேபிள் சரவணன் ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறப்பான முறையில் பந்தலை அமைத்த பந்தல் சிவா, புகைப்பட கண்காட்சியை ஒருங்கிணைத்த சுப்பு ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய அருமைச் சகோதரர் 'தமிழ் கேள்வி' செந்தில்வேல் அவர்களுக்கும், அருமைச் சகோதரி திவ்யா நாதன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

### நீதிக் கட்சிக்கு `திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றம்.

இந்த மாநாட்டை தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் கொண்டு சேர்த்து விழிப்பு உணர்வு ஏற்படுத்திய டி.எம்.கே. ரைடர்ஸ் குழுவுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதற்கெல்லாம் மேலாக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய அனைத்து தி.மு.கழக மூத்த நிர்வாகிகளுக்கும், முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான உடன்பிறப்புகள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1944-ஆம் ஆண்டு இதே சேலத்தில் நடந்த மாநாட்டில் தான் நீதிக் கட்சிக்கு `திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்த மாநாட்டை பற்றி திராவிட நாடு ஏட்டில் பேரறிஞர் அண்ணா ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அந்த கட்டுரையின் தலைப்பு `சேலம் செயலாற்றும் காலம்' என்று அதற்கு தலைப்பு கொடுத்திருந்தார். அந்த மாநாடு நடந்து 80 ஆண்டுகள் கழித்து, நம்முடைய மாநாடு இங்கே நடந்துகொண்டு இருக்கிறது.

### நாடாளுமன்ற தேர்தல் வெற்றி மாநாடு

இன்றைக்கு இந்த மாநாட்டில் பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் இருந்திருந்தார்கள் என்றால், நாளைக்கு முரசொலியில் ஒரு கட்டுரை வந்திருக்கும். அந்தக் கட்டுரையின் தலைப்பாக, `சேலம் மாநாடு, நம்முடைய நாடாளுமன்ற தேர்தல் வெற்றி மாநாடு'என்று தலைப்பு கொடுத்திருப் பார்கள்.




இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு காலையிலிருந்து ஒட்டுமொத்த இந்தியாவுமே சேலத்தை நோக்கித்தான் பாத்துக் கொண்டு இருக்கிறது. நம்முடைய மாநாட்டை நோக்கித்தான் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு ஒரு மிகச் சிறந்த மிகப் பெரிய வெற்றி மாநாடாக நாம் நடத்தி காட்டி இருக்கோம்.

### என் வாழ்வில் மறக்க முடியாத நாள்!

பத்தாண்டு கால பாசிச ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்கான படை, இங்கிருந்து புறப்படத் தயாராக இருக்கின்றது. உங்களையெல்லாம் பார்க்கும் போது நான் மிகுந்த உணர்ச்சி வசப்படுகின்றேன். இது என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத நாள் ஜனவரி 21.

எப்படி என் பிறந்த நாளை மறக்கமாட்டேனோ, திருமண நாளை மறக்க மாட்டேனோ, சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, அதன் பிறகு அமைச்சராக பொறுப்பேற்ற நாளை மறக்க மாட்டேனோ... . அப்படி இந்த நாளையும் மறக்க மாட்டேன். ஆனால் அதையெல்லாம் விட, மிகமிக முக்கியமான நாள் எதுவென்றால், இளைஞர் அணியின் இந்த இரண்டாவது மாநில மாநாடு ஜனவரி 21 ஆம் நாள்தான் என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்.

கலைஞர் அவர்களும் பேராசிரியர் தாத்தா அவர்களும் இளைஞர் தி.மு.கவை நம்முடைய முதலமைச்சரின் கையில் கொடுத்து விட்டுப் போனார்கள்., அதை `இளைஞர் அணி' என்ற மாபெரும் அமைப்பாக்கிய நம்முடைய கழக தலைவர் அவர்கள், இளைஞர் அணி என்ற கொள்கைப் படையை நம் கையில் ஒப்படைத்தார்கள்.

2019 ஜூலை 4ஆம் தேதி கழக இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்பை நான் ஏற்றேன். எவ்வளவு பெரிய பொறுப்பு ஒரு பதற்றம் இருந்தது. தலைவர் வகித்த பொறுப்பு, கலைஞரிடம் தலைவர் தன் உழைப்பால் பல முறை பாராட்டப் பெற்றிருக்கிறார்.

கழகத்தில் எத்தனையோ அணிகள் இருந்தாலும், முதன்மையான அணி இந்த இளைஞர் அணி என்ற அந்தப் பாராட்டைப் பெற்றார். அந்த முதன்மை அணியின் செயலாளராக கிட்டத்தட்ட இன்றோடு நான்கரை ஆண்டுகள் நான் பயணித்துக் கொண்டிருக்கிறேன். பல்வேறு பணிகளைச் செய்து முடித்திருக்கிறோம். ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என தலைமையிட்ட கட்டளைகளை செய்து முடித்திருக்கிறோம்.

ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இளைஞர் அணியின் நிர்வாகிகள் நியமனங்களுக்காக நானும் நம்முடைய துணைச் செயலாளர்களும் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும் நேர் காணல் செய்து, உழைப்பின் அடிப்படையில் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமனம் செய்தோம். இதுவே எங்கள் இளைஞர் அணி தம்பிமார்களுக்கு ஒரு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுத்தது.

தி.மு.கழக வரலாற்றையும், கொள்கையையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு போக கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளை `முரசொலி'யில் இளைஞர் அணியின் சார்பாக முரசொலி பாசறைப் பக்கத்தை சென்ற வருடம் துவங்கினோம்.

முதலமைச்சர் அவர்கள்தான் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அண்ணா அறிவாலயத்தில் நடந்த நிகழ்ச்சியில் துவக்கி வைத்தார். அப்போது முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது ஒரு விஷயத்தைச் சொன்னார்கள்.

``என்னை இளைஞர் அணி நிகழ்ச்சிக்கு, நீங்கள் அழைப்பதே இல்லை" என்று அப்போது நம்முடைய தலைவர் சொன்னார். சொல்லிவிட்டு சொன்னார், ``ஒருவேளை அரசுப் பணிகள் அதிகமாக இருக்குமென்று நினைத்து அழைக்காமல் விட்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன்" என்று சொன்னார்கள்.

அவர் சொன்னவுடன் அண்ணா அறிவாலயத்தில் நம்முடைய அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்களை வைத்துத்தான் நடத்தினோம். இன்றைக்கு இந்த மாநாட்டுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறோம்.

> **"இதை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றால், டெல்லியில் சென்று இளைஞர் அணி சார்பாக ஒரு போராட்டத்தை நடத்துவதற்கும் நம்முடைய தலைவர் அவர்கள் உத்தரவிட்டால், அதை செய்யவும் நம்முடைய இளைஞர் அணி தம்பிமார்கள் தயாராக இருக்கிறார்கள். மாநில உரிமைகளை பறிப்பதிலேயே ஒன்றிய அரசு முழுநேர வேலையாக செய்து கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் நாம் இப்போது `மாநில உரிமைகள் மீட்பு முழக்கம்' என்று இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம்."**

### இளைஞர் அணிக்கு முக்கியமான மூன்று பணிகள்!

இனிமேல், இளைஞர் அணி நடத்துகின்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் எங்களுடைய தலைவருக்கு அழைப்பு இருக்கும். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு பணியைக் கொடுத்தார்கள். அதில், இளைஞர் அணிக்கு முக்கியமான மூன்று பணிகள்.

முதல் பணி `கலைஞர் நூற்றாண்டு மாரத்தான் போட்டி' `மாவட்டம் தோறும், நூற்றாண்டு பேச்சுப் போட்டி', அதேபோல ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் `கலைஞரின் பெயரில் நூலகங்கள்' திறக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அதில் ஏற்கனவே 15 சட்டமன்றத் தொகுதிகளில் நூலகங்களை இளைஞர் அணி தம்பிமார்களின் ஏற்பாட்டில் திறந்து வைத்திருக்கிறோம். மாநாடு முடிந்ததும் அந்தப் பணிகளை 100 சதவிகிதம் செய்து முடிப்போம்.

### `50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து'

இந்த மாநாட்டை நடத்துகின்ற வாய்ப்பை கழகத் தலைவர் அவர்கள் எங்களுக்கு கொடுத்த பிறகு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று இளைஞர் அணிச் செயல்வீரர் கூட்டத்தை சிறப்பாக செய்து முடித்தோம். உங்களையெல்லாம் உங்கள் மாவட்டத்திற்கே வந்து நான் சந்தித்தேன். உங்களையெல்லாம் நான் சேலத்திற்கு அழைத்தேன். அந்த கூட்டங்களையெல்லாம் சிறப்பாக நடத்திய அனைத்து மாவட்டக் கழக செயலாளர்களுக்கும் இந்த நேரத்தில் மீண்டும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இளைஞர் அணி மாநாட்டிற்காக நம்முடைய தலைவர் அவர்கள் முரசொலியில் உங்களையெல்லாம் அழைக்கின்ற அந்த கடிதங்கள், வெளியிட்ட காணொலிகள் நம் இளைஞர் அணி தம்பிமார்களுக்கு ஒரு மிகப் பெரிய டானிக்காக இருந்தது.

நம் மாணவர்கள் மருத்துவராகவும் கனவைப் பறிக்கின்ற நீட் தேர்வு ரத்து செய்ய வேண்டுமென்று, சென்ற வருடம் ஆகஸ்ட் 20ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் உண்ணாநிலைப் போராட்டத்தை இளைஞர் அணி முன்னெடுத்தது.

நீட் விலக்கு உண்ணாநிலை போராட்டத்தோடு நாம் நிற்கவில்லை. அதை மக்கள் போராட்டமாக மாற்றவேண்டுமென்று, கையெழுத்து இயக்கம் தொடங்கினோம். தலைவரிடம், `50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து'களை நாங்கள் பெறுவோம் என்று சொன்னோம். ஆனால், இன்றைக்கு கிட்டத்தட்ட 85 லட்சம் கையெழுத்துகளை நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டுமென்று பெற்றிருக்கிறோம். அதை தலைவரிடம் கொடுக்கப் போகிறோம்.

### நம்முடைய உரிமைகளை ஒன்றிய அரசு பறித்தது!

இதை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றால், டெல்லியில் சென்று இளைஞர் அணி சார்பாக ஒரு போராட்டத்தை நடத்துவதற்கும் நம்முடைய தலைவர் அவர்கள் உத்தரவிட்டால், அதை செய்யவும் நம்முடைய இளைஞர் அணி தம்பிமார்கள் தயாராக இருக்கிறார்கள். மாநில உரிமைகளை பறிப்பதிலேயே ஒன்றிய அரசு முழுநேர வேலையாக செய்து கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் நாம் இப்போது `மாநில உரிமைகள் மீட்பு முழக்கம்' என்று இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அடிமை அ.தி.மு.கவின் உதவியோடு தவழ்ந்து, தவழ்ந்து முதல்வரான பழனிச்சாமி துணையோடுதான் நம்முடைய உரிமைகளை ஒன்றிய அரசு பறித்தது. வெளியுறவுத்துறை, இராணுவம் மட்டும் ஒன்றிய அரசிடம் இருந்தால் போதும் என்பதுதான் நம்முடைய திராவிட இயக்கத்தின் கொள்கை. ஆனால், இன்றைக்கு எல்லா துறைகளையும் ஒன்றிய அரசு தன் கையில் வைத்திருக்கிறது.

கல்வி, சுகாதாரம் என்று எல்லா துறைகளிலும் மாநில அரசின் உரிமைகளை சட்டத்திற்கு புறம்பாக ஒன்றிய அரசு பறித்து வைத்திருக்கிறது. முக்கியமாக வரி வருவாய். நம்மிடம் அதிகமான வரியை பெற்றுக் கொண்டு, நமக்குத் திருப்பி கொடுப்பதே இல்லை. நாம் ஒரு பைசா ஒன்றிய அரசுக்கு வரியாக செலுத்தினால், நமக்கு அவர்கள் திருப்பி தருவது வெறும் 29 காசுகள், அதே போல கடந்த 9 ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்கள் வரிப்பணம் எவ்வளவு கட்டியிருக்கிறோம் தெரியுமா, கிட்டத்தட்ட 5 லட்சம் கோடி ரூபாய் வரியாக கட்டி இருக்கிறோம். ஆனால், அவர்கள் நமக்கு திருப்பி கொடுத்தது வெறும் 2 லட்சம் கோடி ரூபாய் தான்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

## ஈ.டி.க்கும் பயப்பட மாட்டோம்! மோடிக்கும் பயப்பட மாட்டோம்!

# இது இளைஞர் அணி கிடையாது ; கலைஞர் அணி !...

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

இப்படிச் செய்வதால் மாநில அரசு மக்களுக்கான திட்டங்களில் செயல்படுத்துவதில் செயல்பட முடியாத ஒரு சூழலை ஒன்றிய அரசு ஏற்படுத்துகிறது. அதற்கு சிறந்த உதாரணம், சமீபத்தில் வந்த அந்த மழை வெள்ளம். மிகப் பெரிய சேதாரம். அப்பொழுது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் வைத்தார்கள். `பணம் கொடுங்கள் இழப்பீடு கொடுக்க வேண்டும் மக்களுக்கு' என்று சொன்னார்கள். அப்போது ஒன்றிய அமைச்சர் என்ன சொன்னாங்க `நாங்கள் என்ன ஏ.டி.எம் மெஷினா?' என்று கேட்டார்கள்.

அதற்குதான் நான் ஒரு வார்த்தை சொன்னேன். ``நாங்க என்ன உங்க அப்பன் வீட்டு பணத்தைக் கேட்கிறோமா'' என்று கேட்டேன். அதற்கு அந்த நிதியமைச்சருக்கு பயங்கர கோபம். டெல்லியில் பத்திரிகையாளர்கள் சந்திப்பை வைத்து, கிட்டத்தட்ட அரை மணி நேரம் எனக்கு பாடம் எடுத்தார்கள். ``மரியாதையாக பேச கத்துக்கோங்கோ'' என்றார்.

நான் உடனே, அடுத்த நாள் சொன்னேன், அம்மா நான் மரியாதையாகவே கேட்கிறேன் ``மாண்புமிகு அமைச்சர் அவர்களே நான் உங்கள் மாண்புமிகு அப்பா வீட்டுப் பணத்தைக் கேட்கவில்லை'' என்று சொன்னேன். அவர்கள் கேட்ட மரியாதையை நான் கொடுத்து விட்டேன் நாம் கேட்ட நிதியைத்தான் இதுவரைக்கும் ஒரு பைசா கூட திருப்பிக் கொடுக்கவில்லை.

அதேபோல் நம்முடைய கல்வி உரிமை, மொழி உரிமை, நிதி உரிமை வேலை வாய்ப்பு உரிமை, அதிகாரக் குறைப்பு, பண்பாட்டு ரீதியான தாக்குதல் என்று நம் மீது மிகப்பெரிய அளவில் ஒன்றிய அரசுத் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது.

புதிய கல்விக் கொள்கை என்று சொல்லி, ஐந்தாம் வகுப்புக்கு பொதுத் தேர்வு கொண்டு வருகிறார்கள், எட்டாம் வகுப்புக்கு பொதுத் தேர்வு கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல `நீட் ஒரு மிகப்பெரிய உயிர் கொல்லி' நோயாக மாறியிருக்கிறது. 16 குழந்தைகள் இறந்திருக் கிறார்கள். அனிதாவில் ஆரம்பித்து, சென்னை ஜெகதீஸ்வரன் வரைக்கும் இதுவரை 16 குழந்தைகள் தற்கொலை பண்ணி இருக்கிறார்கள்.

### நாங்கள் ஈ.டி.க்கும் பயப்பட மாட்டோம், மோடிக்கும் பயப்பட மாட்டோம்

இப்போது மருத்துவம் மட்டுமல்ல, எல்லா பட்டப்படிப்புகளுக்கும் நுழைவுத் தேர்வு வரப்போகுதென்று சொல்கிறார்கள். நம்முடைய உரிமை மட்டுமல்ல, தமிழ் மொழி நம்முடைய உயிர். தமிழை அழிக்க நினைத்தால் இங்கே கூடி இருக்கக்கூடிய என்னுடைய இளைஞர்கள் நாங்கள், எங்கள் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கின்றோம்.

இந்த நேரத்தில் ஒன்றிய அரசுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் இந்த முயற்சியை 2000 வருடமாக பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். இதுவரைக்கும் தமிழ்நாட்டுக்குள் உங்களால் கால் வைக்க முடியவில்லை. இந்த முயற்சியில் உங்களால் இன்னும் 2000 வருடம் ஆனாலும் வெற்றி பெற முடியாது. தமிழருடைய அடையாளத்தை அழிக்க நினைத்தால், நீங்கள்தான் அழிந்து போவீர்கள்.

உங்க எண்ணத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் அனுமதிக்காது. ஏனென்றால், இந்த இயக்கத்தை இப்போது வழி நடத்துவது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற ஒரு மாபெரும் தலைவர். அதேபோல இந்த இயக்கத்தைப் பயமுறுத்த நினைக்கிறார்கள். ஈ.டி, சி.பி.ஐ, ஐ. டி ரெய்டுகள் அப்படியென்று நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். நாங்கள் ஈ.டிக்கும் பயப்பட மாட்டோம், மோடிக்கும் பயப்பட மாட்டோம்.

உங்களுடைய இந்த உருட்டல் மிரட்டலுக்கெல்லாம் தி.மு.க தொண்டன் இல்லை, தி.மு.க தொண்டன் வீட்டில் இருக்கக்கூடிய ஒரு சாதாரண கைக்குழந்தைகூட பயப்படாது. அதற்கு காரணம் நமக்கு கிடைத்திருக்கக்கூடிய நம்முடைய தலைவர் அப்படிப்பட்டவர். எங்கோ உட்கார்ந்து கொண்டு கட்டளை இடுகின்ற தலைவர் இல்லை, நம்முடைய தலைவர். களத்தில் இறங்கி தொண்டர்களோடு தொண்டனாக கைக்கோர்த்து பணியாற்றக் கூடியவர்தான் நம்முடைய தலைவர் அவர்கள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய மொத்த உருவமாக இங்கே அமர்ந்திருப்பவர்தான் நம்முடைய தலைவர் அவர்கள். தி.மு.க என்றைக்குமே தொண்டர்களை கைவிட்ட வரலாறு கிடையாது. தொண்டர்களுக்கு ஒரு ஆபத்து என்றால் அதற்கு கட்சி தலைவரே களத்தில் இறங்கி நிற்பார் அதுதான் தி.மு.க.

### இந்தியா கூட்டணி வெற்றி

நம்முடைய திராவிட இயக்கம் ஏற்கனவே ஒரு நூற்றாண்டைக் கடந்து இருக்கிறது. இந்த இயக்கத்தை மேலும் ஒரு நூற்றாண்டாவது நாம் பாதுகாக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்நாடும், தமிழ் மொழியும், தமிழர் பண்பாடும் காப்பாற்றப்படும். இந்த இயக்கத்தை நாம் பாதுகாத்தால்தான் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான சமூக நீதி காப்பாற்றப்படும். அதற்கு இப்போது நாம் செய்யவேண்டிய ஒரே வேலை என்னவென்றால் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி 40 இடங்களிலும் நம்முடைய இந்தியா கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெற்றாக வேண்டும்.

நம்முடைய தலைவர் யாரை கை காட்டுகிறாரோ அவர்தான் அடுத்த இந்திய பிரதமராக வரவேண்டும். அதற்கு நாம் அனைவரும் உழைக்க வேண்டும். இன்றைக்கு பலர் ஆச்சரியமாக பார்க்கிறார்கள். 2011லிருந்து 2021 வரைக்கும் 10 வருஷம் தி.மு.க ஆட்சியில் இல்லை. ஆனால், இப்போது தொடர்ந்து அனைத்து தேர்தல்களிலும் மக்கள் ஆதரவைப்பெற்று வெற்றி.

### சின்ன கதை!

2019 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி, 2021 சட்டமன்றத் தேர்தல் வெற்றி, அதன் பிறகு உள்ளாட்சித் தேர்தலில் தொடர்ந்து வெற்றி எப்படி இந்த வெற்றியைப் பெற முடிகிறது என்று அ.தி.மு.க அதிசயமாக, ஆச்சரியமாக பார்க்கிறார்கள். அதற்கு ஒரு சின்ன கதைமூலம் இங்கு சொல்லவிரும்புகின்றேன்.

ஒரு ஊரில் ஒரு சின்ன பையன் இருந்தான். அவனுக்கு ஓட்டப்பந்தயத்தில் மிக ஆர்வம். அவனோடு ஓடி யாரும் ஜெயிக்க முடியாது என்று அவனுக்குள் ஒரு பெரிய தைரியம். ஒரு தடவை ஊரில் ஓட்டப்பந்தயம் போட்டி நடந்தது. ஒரு வயதான முதியவரும் அந்தப் போட்டியை பார்த்துக் கொண்டிருந்தார். மற்ற எல்லாரையும் விட அந்த சிறுவன் வேகமாக ஓடி வெற்றி பெற்று விட்டான்.

எல்லாரும் கைதட்டி உற்சாகப்படுத்தினார்கள். ஆனால், அந்த வயதான முதியவர் மட்டும் கைத்தட்டவே இல்லை. அங்கு மீண்டும் ஒரு போட்டி நடந்தது. அந்த பையனைவிட சற்று வயது அதிகமானவர்கள் சேர்ந்து கலந்து கொண்டு அந்த போட்டியிலும் அந்த சிறுவனே திரும்பவும் வேகமாக ஓடி, அவனே ஜெயித்து விட்டான். ஒட்டுமொத்த ஊருமே கை தட்டியது. ஆனால் அந்த வயதான பெரியவர் அப்போதும் கைதட்டவே இல்லை.

அப்போது அந்த முதியவரிடம் சென்று அந்த சின்ன பையன் கேட்கிறான். நான்தான் ஒவ்வொரு முறையும் ஜெயிச்சுட்டு இருக்கேன். எல்லாரும் கை தட்டுகிறார்கள். நீங்கள் மட்டும் ஏன் கைதட்ட மாட்டீர்கள் என்று அந்த பெரியவரிடம் கேட்கிறான். அப்போது அந்த பெரியவர் சொல்கிறார். இந்த கிராமத்திலிருந்து வேறு இரண்டு சிறுவர்களுடன் ஓடி, உன்னால் ஜெயிக்க முடியுமா என்று கேட்கிறார்.

அதில் ஒரு சிறுவன் சத்தான உணவில்லாமல் வாழுகின்ற ஒரு ஏழை வீட்டு பையன். மற்றொரு சிறுவன் கண்ணொளி இல்லாத ஒரு மாற்றுத் திறனாளி பையன். இவங்க ரெண்டு பேரையும் உன்னால ஜெயிக்க முடியுமா என்று அந்த வயதான பெரியவர் கேட்டார். இப்போது பாருங்கள் என்று சொல்லி திரும்பவும் ஓட்ட பந்தயம் ஓடி முதல் ஆளாக திருப்பி அந்த பையன் தான் வெற்றி பெற்றான். மற்ற அந்த இரண்டு சிறுவர்களும் பின்னாடி கொஞ்சம் தடுமாறி கொண்டு தான் வந்தார்கள்.

இதைப் பார்த்த மக்கள் கூட்டம் இந்த முறை வெற்றி பெற்ற அந்த சிறுவனுக்கு கை தட்டவே இல்லை. அப்போது அந்த சிறுவன் சென்று அந்த தாத்தாவிடம் போய் கேட்டான். போன முறை ஜெயிக்கும் போதெல்லாம் கைதட்டினார்கள். இந்த முறை ஜெயிக்கும் போது ஏன் இந்த ஊர் ஜனங்கள் கைதட்டவில்லை என்று கேட்டான். அப்போது அந்த தாத்தா சொன்னார்.

``இப்போது மீண்டும் நீ ஓடு, அதே பசங்களோட போட்டி போட்டுக் கொண்டு ஓடு. ஆனால், இந்த தடவை அந்த இரண்டு சிறுவர்களின் கைகளையும் பிடித்துக் கொண்டு சேர்ந்து ஓடு'' என்று சொன்னார்.

அதேபோல் அந்த சிறுவனும் அந்த இரண்டு பேரின் கைகளையும் பிடித்துக் கொண்டு சீராக ஓடினான், மூன்று பேரும் ஒன்றாக அந்த ஓட்டப்பந்தயத்தில் ஜெயித்தார்கள். இப்போது அந்த ஒட்டுமொத்த ஊருமே அந்த பையனைப் பாராட்டியது. இப்படித்தான் தி.மு.க.வின் வெற்றி. யார் யாரெல்லாம் உரிமைகள் மறுக்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்களோடு கைகோர்த்துக்கொண்டு நாங்கள் ஓடிக் கொண்டிருக்கிறோம்.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடன் கைகோர்த்து நாங்கள் ஓடிக் கொண்டிருக்கிறோம். பெரும்பான்மையின் பேரால் அச்சுறுத்தப்படும் சிறுபான்மை மக்களோடு கைகோர்த்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறோம். மாற்றுதிறனாளிகளோடு கைக்கோத்துக்கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறோம், மூன்றாம் பாலினம் என்று சொல்லப்படுகின்ற திருநங்கை, திருநம்பிகளோடு கைகோர்த்துக்கொண்டு ஓடிக்கொண்டு இருக்கிறோம். காலங்காலமாக அடிமைப்படுத்தப்பட்ட பெண்களோடு கைகோர்த்துக்கொண்டு நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம்.

எல்லோரும் சேர்ந்துதான் அந்த வெற்றிக்கோட்டை தொட வேண்டுமென்று நாங்கள் இருக்கின்றோம். அதனால்தான் தி.மு.கவின் தேர்தல் வெற்றியை ஒவ்வொருவரும் தங்களுடைய தமிழ்நாட்டு மக்களுடைய வெற்றியாக மக்கள் கொண்டாடி கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று ஒரு வெற்றியைத்தான் தி.மு.க இடம் பெற்றிருக்கக் கூடிய இந்தியா கூட்டணி தமிழ்நாட்டில் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெறப்போகின்றது.

### நம் தலைவர் சொன்னது என்ன?

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இந்த இந்தியா கூட்டணிதான் மாபெரும் வெற்றி பெற இருக்கின்றது. பாசிஸ்ட்டுகளுடைய காலம் முடிவுக்கு வர இருக்கின்றது. அந்த குறிக்கோளோடு நாம் அனைவரும் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தேர்தல் பணியாற்ற துவங்கி விடுவோம். இந்த மாபெரும் மாநாட்டின் மூலமாக ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல இருக்கின்றேன்.

இளைஞர் அணி தம்பிகளுக்கு என்று இந்த முறை ஒரு லட்சியம் இருக்கிறது. அது என்ன லட்சியம் என்றால் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் தேதி அன்றைக்கு அண்ணா அறிவாலயமே மிகுந்த உணர்ச்சிவசப்பட்டு நின்றது. தலைவர் கலைஞர் அவர்களின் மறைவுக்கு பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குத்தான் கழகத் தலைவராக பொறுப்பேற்றார்கள்.

அப்போது அவர் கூறிய வார்த்தை, ``எனக்கு ஒரு கனவு இருக்கின்றது. சாதி பேதமற்ற சமூகம் அமைந்திட வேண்டும். ஆணுக்கு பெண் சமம். திருநங்கையர் மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒளி வீச வேண்டும். பகுத்தறிவு வழியில் உலகை காண வேண்டும். மிக, மிக முக்கியமாக நாடெங்கும் காவிச் சாயம் பூச நினைக்கின்ற பாசிஸ்ட்டுகளை வீழ்த்த வேண்டும். இந்தக் கனவை நான் காண்கின்றேன். நான் மட்டும் அல்ல இயக்கத்தின் கோடான கோடி தொண்டர்களும் சேர்ந்து காண்கின்றோம்'' என்று நம்முடைய தலைவர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

நான் சொல்கிறேன் எங்களுடைய இளைஞர் அணி தம்பிமார்கள் எங்களுக்கு அந்த லட்சியம் தலைவர் கண்ட அந்தக் கனவை நினைவாக்கி தரவேண்டியதுதான் எங்களுடைய அடுத்த வேலை. இந்த லட்சியம் ஏதோ ஒரு தனிப்பட்ட உதயநிதியின் லட்சியம் இல்லை. இங்கு வந்திருக்கக்கூடிய லட்சக்கணக்கான இளைஞர் அணி தம்பிமார்களின் இலட்சியம். இந்தியா முழுவதும் காவிச் சாயம் பூச நினைக்கின்ற பாசிஸ்டுகளை வீழ்த்துவதே அந்த லட்சியத்தின் முதல் படி.

காவிச்சாயத்தை அழித்துவிட்டு சமூக நீதி வண்ணத்தை பூசி எல்லோரும் உறுதி ஏற்று உழைப்போம். அதற்கு அடித்தளம் இடுகின்ற வகையில் இன்றைக்கு இந்த மாநில உரிமைகள் முழக்கம் என்று இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கிறது. எனவே, தலைவர் அவர்களே இப்போது கழகத் தலைவர் ஆகிவிட்டாலும் இந்த இளைஞர் அணிக்கு எப்பொழுதுமே நீங்கள் தான் செயலாளர், நான் பேருக்குத்தான் செயலாளர் இந்த இளைஞர் அணிக்கு நிரந்தரமாக எப்பொழுதுமே நீங்கள் தான் செயலாளர்.

இது உங்களுடைய குழந்தை. இந்த அணிக்கு தாயும் நீங்கள்தான் தந்தையும் நீங்கள்தான் எல்லாமே நீங்கள்தான். எனவே, இப்போது இந்த குழந்தைகள் எல்லாம் வளர்ந்து விட்டார்கள். எனவே, அந்த குழந்தைகளுக்கு எல்லாம் நிறைய பொறுப்பு கொடுங்கள், நிறைய வேலை கொடுங்கள். வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தகுதியான வேட்பாளர்களுக்கு, தகுதியான இளைஞர்களுக்கு போட்டியிடுகின்ற அந்த வாய்ப்பைக் கொடுங்கள். கண்டிப்பாக எங்களுடைய இளைஞர் அணி தம்பிமார்கள் உழைத்து அந்த வெற்றியை உங்களுடைய காலடியில் சமர்ப்பிப்போம். இது வெறும் இளைஞர் அணி கிடையாது இது கலைஞர் அணி என்று கூறிக்கொண்டு கழக இளைஞர் அணியின் இந்த மாநாடு வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும். சேலத்தில் கூடியுள்ள நம்முடைய இளைஞர் படை, டெல்லியில் அமர்ந்திருக்கக்கூடிய பாசிஸ்ட்டுகளை விரட்டி அடிக்க போவது உறுதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் மொத்த உருவமாக இங்கே அமர்ந்திருப்பவர்தான் நம்முடைய தலைவர் அவர்கள். தி.மு.க என்றைக்குமே தொண்டர்களைக் கைவிட்ட வரலாறு கிடையாது. தொண்டர்களுக்கு ஒரு ஆபத்து என்றால் அதற்கு கட்சித் தலைவரே களத்தில் இறங்கி நிற்பார் - அதுதான் தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. சாமிநாதன்

**சனவரி 22 (2011)**



மாணவப் பருவத்தில் "தமிழ்மன்றம்" என்ற அமைப்பினை தனது பகுதியில் துவக்கிய இவர், அப்போதிலிருந்தே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய இவர், 1975இல் கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டினை சிறப்பாக நடத்தினார்.

1958ல் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1967ல் கோபிச்செட்டிபாளையம் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சி. சுப்பிரமணியத்தை எதிர்த்து, கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில் 1971ல் ஈ.வி.கே. சம்பத்தை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதியில் உள்ள ஏழையெளிய மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றார். குறிப்பாக நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில்

## பொங்கல் விழா - 1500 நபர்களுக்கு 16 வித பரிசுப் பொருள்கள்!

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் ஜி.வி. நாகவள்ளி தலைமையில்

*சென்னை, ஜன.22-*

*சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் தமிழர் நாள் பொங்கல் விழா கடந்த 14-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணியளவில் பாடி, குமரன் நகர், எம்.ஜி.ரோட்டிலுள்ள மாநகராட்சி திடலில் 1,500 நபர்களுக்கு 16 விதமான பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் விழா சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளரும், 88வது வார்டு மாமன்ற உறுப்பினரும், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) உறுப்பினருமான ஜி.வி. நாகவள்ளி பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.*

*இதில் கழக பொருளாளர் கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர். பாலு,*

*இந்துசமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்துகொண்டு அம்பத்தூர் தெற்கு பகுதியைச் சேர்ந்த பகுதி, வட்ட, மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் என மொத்தம் 156 பேர்,*

*BLA 2 114, BLC 1157, ஆட்டோ சங்கம் 50 பேர் மற்றும் கழக முன்னோடிகள் 23 பேர் என மொத்தம் - 1500 நபர்களுக்கு மளிகை பொருட்கள் மற்றும் புத்தாடை உள்ளிட்ட 16 விதமான பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசினை வழங்கினார்கள்.*

*இவ்விழாவில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், அம்பத்தூர் மண்டலக்குழு தலைவர் பி.கே.மூர்த்தி எம்.சி., அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி. லோகேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு அமைப்பாளர் எல்.பி.எப். மோகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ. பாலமுருகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி., தலைமை பொதுக் குழு உறுப்பினர் ரமேஷ் நீலகண்டன் எம்.சி., எம்.இ. சேகர் எம்.சி.,*

*திருமதி உமா சந்தானம் எம்.சி., திருமதி பொற்கொடி கண்ணபிரான் எம்.சி., இராடீக்கா, சீனிவாசன், பிரகாஷ், குமார், த.வ.லால் மற்றும் சுற்றுச்சூழல் அணி மற்றும் அம்பத்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சோம. திருநாவுக்கரசு

**சனவரி 22 (2014)**



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது பேச்சாற்றலைக் கேட்டு கழகத்தில் இணைய வேண்டும் என்று முடிவெடுத்து கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார்.

நெல்லை மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் – மாவட்டப் பொருளாளர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

நெல்லை நகர் மன்ற உறுப்பினராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதுடன், கூட்டுறவு வங்கி, அர்பன் வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மொழிப் போராட்டத்தில் பங்கு பெற்று சிறையில் அடைக்கப்பட்டார். 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சேலத்தில் புதிய வரலாறு படைத்திட்ட கழக இளைஞர் அணி

# 2 - வது மாநில மாநாடு எழுச்சிமிகு காட்சிகள் காணீர்!





சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டுத் திடலில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் திறந்து வைத்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.







கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், கழகக் கொடியை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி ஏற்றி வைத்தார். மாநாட்டினை மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

முரசொலி பாசறை

# திராவிட மாடல் அரசு 52

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## ‘ஏ.ஐ’ – காலத்துக்கேற்ற கணினிக் கல்வி!

ஏ.ஐ. (AI) - ஆர்டிஃபீசியல் இன்டெலிஜென்ஸ். அதாவது, செயற்கை நுண்ணறிவு. எதார்த்த உலகிலும், மெய்நிகர் உலகிலும் இன்று இதுதான் பரபரப்பான பேசுபொருள்.

மனிதர்களை ஐந்தறிவு கொண்ட விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது, பகுத்தறிவு எனும் ஆறாம் அறிவு. அந்தப் பகுத்தறிவால், தான் வளர்த்துக் கொண்ட அறிவியல் மனப்பான்மையால் மனிதர்கள் செய்த கண்டுபிடிப்புகளும், உருவாக்கிய தொழில்நுட்பங்களும்தான் இன்று நாம் அனுபவித்து வரும் வசதிகளுக்குக் காரணம்.

அப்படியான வசதிகளில் ஒன்று, கணினி. அந்தத் தொழில்நுட்பம் இல்லாத துறைகளே இன்று உலகில் இல்லை. கணினி கண்டுபிடிக்கப்பட்ட காலம் தொட்டு இப்போது வரை மனிதர்கள்தான் கணினிக்கு உள்ளீடு (இன்புட்) தர வேண்டும். அதை உள்வாங்கிக் கொண்டு, வெகு விரைவில், நாம் எதிர்பார்க்கும் வெளியீட்டை (அவுட்புட்) அல்லது தீர்வை கணினி தரும்.

இந்தப் பணியைச் செய்ய வைக்க, கணினிக்குப் பல வகையான நிரல்களைக் கட்டளைகளாகக் கொடுக்க வேண்டும். அவ்வாறு பல்வேறு துறைகளுக்குத் தேவையான, பல வகையான நிரல்களைக் கொண்ட மென்பொருட்களை உருவாக்க இந்தியா உட்பட உலகம் முழுவதும் மென்பொருளாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்தத் துறையில் தமிழ்நாடும் தமிழர்களும் முன்னணியில் இருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே..!

### கணினியில் புதிய பாய்ச்சல்

எல்லாத் துறைகளிலும் காலமாற்றத்துக்கு ஏற்ப பல முன்னேற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அதுபோல கணினித் துறையிலும் அடுத்தகட்ட பாய்ச்சலுக்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் ‘செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்’.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் மனிதர்கள் கணினிக்குக் கட்டளையிடுவது என்ற நிலையில் இருந்து முன்னேறி, கணினியையே சிந்திக்க



வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரோபோட்டிக்ஸ், சாட் ஜி.பி.டி. போன்றவை எல்லாம் அதன் ஒரு பகுதிதான்.

இந்தப் புதிய களத்திலும் வருங்காலத்தில் தமிழர்கள் முன்னணியில் நிற்க வேண்டும் என்ற சீரிய இலக்கின் அடிப்படையில் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, கொண்டு வந்துள்ளதுதான் ‘டீல்ஸ் (TECHNOLOGY EDUCATION AND LEARNING SUPPORT - TEALS)’ எனும் திட்டம். கணினி உலகில் முன்னணி நிறுவனமாக விளங்கி வரும் மைக்ரோசாஃப்ட் உடன் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது நம் கழக அரசு.

### கணினிக் கல்வியை வலுப்படுத்த...

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கணினிக் கல்வியில் வலுவான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்க உருவானதுதான் ’டீல்ஸ்’ திட்டம். அமெரிக்காவைச் சேர்ந்த கெவின் வாங் எனும் கணினி ஆசிரியரால் 2009-இல் உருவாக்கப்பட்டது இந்தத் திட்டம். பின்னாளில் அந்தத் திட்டம் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் ’மைக்ரோசாஃப்ட் கொடையாளர்’ (மைக்ரோசாஃப்ட் பிலாந்த்ரபி) எனும் பரோபகாரப் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது.

உலகம் முழுவதும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் மைக்ரோசாஃப்ட் நிறுவனம், இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில் இதைச் செயல்படுத்துகிறது. இதன் மூலம் அரசுப் பள்ளியில் பயிலும் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக கடந்த 2023 ஜூலை மாதம் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டது. தொடர்ந்து, 10 அரசுப் பள்ளிகள், 2 அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் 2 தனியார் பள்ளிகள் என மொத்தம் 14 பள்ளிகளில் சோதனை முறையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மாணவர்களின் கணினித் திறனில் அந்தத் திட்டம் செய்த சிறப்பான பங்களிப்பைத் தொடர்ந்து, இந்த ஆண்டு மேலும் 100 பள்ளிகளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது நம் கழக அரசு.

### முந்தியிருப்பச் செயல்

ஏற்கெனவே அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் ‘கோடிங்’ பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் அடுத்த கட்டமாக, ‘மெஷின் லேர்னிங்’ எனும் தளத்தில் மாணவர்களுக்குப் போதுமான அளவு அறிமுகத்தையும், அடிப்படைத் திறன்களையும் வழங்குவதுதான் இந்த ‘டீல்ஸ்’ திட்டத்தின் முக்கிய நோக்கம்.

இந்தப் பயிற்சிகளை மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் நிபுணர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் மூலம் மாணவர்களுக்குக் கடத்தப்படும். சமயங்களில் நிபுணர்களும் நேரடியாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள்.

தற்போது சோதனை அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் பயிற்சியானது 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. வரும் ஆண்டுகளில் 6 ஆம் வகுப்பு முதலே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைத் தனிப் பயிற்சியாக இல்லாமல் பாடத்திட்டத்திலேயே கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் மாணவர்கள் வருங்கால டிஜிட்டல் உலகுக்குத் தங்களை ‘அப்டேட்’ செய்து கொள்ள முடியும்.

இவ்வாறு காலத்துக்கேற்ற படி மாணவர்களை முந்தியிருக்கச் செய்யும் தாயுமானவ முதலமைச்சரை எவ்வளவு போற்றினாலும் தகும்..!

**...சாதனை தொடரும்**

### செம்ம ‘டீல்’ இல்ல..?

நாட்டிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இந்த ‘டீல்ஸ்’ திட்டத்தைச் சிறுமைப்படுத்தும் விதமாகச் சிலர், ‘இது தேசிய கல்விக் கொள்கையில் சொல்லப்பட்ட திட்டம்’ என்ற தவறான தகவலைப் பரப்பி வருகின்றனர்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டுக்கென்று நீண்ட வரலாறும் நெடிய பாரம்பரியமும் உண்டு. 1970 ஜூலை 16 ஆம் தேதி அன்றைய கிண்டி பொறியியல் கல்லூரியில் (இன்றைய அண்ணா பல்கலைக்கழகம்) நடந்த தமிழ் மன்ற விழாவில் தந்தை பெரியார் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். அங்கு சென்ற தந்தை பெரியாரிடம் கல்லூரிக்கு என புதிய கம்ப்யூட்டரை வாங்கி இருப்பதாக, அங்கு இருக்கும் பேராசிரியர்கள் தெரிவிக்க அதைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டார் பெரியார். அப்போது அதற்கு ‘கணினி’ என்கிற பெயர் கூட வைக்கப்படவில்லை. ஐ.பி.எம் கம்ப்யூட்டர் 1620 மாடல் கணினி அது. எந்தத் தேதியைச் சொன்னாலும் அதன் கிழமையை மிகச் சரியாக அந்தக் கணினி சொல்லிவிடும் என்கிற செய்தியை அங்குள்ள பேராசிரியர்கள் சொல்ல, பெரியார் சில தேதிகளைச் சொல்லி, கிழமை சரியாக வருகிறதா என்று பார்த்தார். தன்னுடைய பிறந்த நாளையும் அவர் சொல்ல சரியாக சனிக்கிழமை என்று கூறியது அந்தக் கணினி. அவரிடம் இந்தக் கணினி பற்றிக் கூறியது அன்றைய பேராசிரியரும் பின்னாளில் துணைவேந்தரும் ஆன வா.செ.குழந்தைசாமி அவர்கள்.

இதன் தொடர்ச்சியாக 1997-லேயே அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்துத் தமிழ்நாட்டுக்கெனத் தனியே தகவல் தொழில்நுட்பத் துறைக்கான கொள்கை ஒன்றை உருவாக்கி, தனியாக ஒரு துறையை உருவாக்கி, அதற்கென ஒரு அமைச்சரை நியமித்தார்.

தகவல் தொழில்நுட்பத் துறை பற்றி, நாட்டின் பிறமாநிலங்கள் பெரிதும் விழிப்புணர்வு அடையாத காலகட்டத்திலேயே பள்ளிகளில் கணினி பாடப்பிரிவு, டைடல் பார்க், ‘மின்னணு நிர்வாகம்’ (E-GOVERNANCE) போன்ற கட்டமைப்புகளை மாநிலத்தில் உருவாக்கினார். தேசிய கல்விக் கொள்கை என்கிற ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே இவையெல்லாம் நடந்தன.

தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், அதில் மாநிலங்கள் அடைய வேண்டிய இலக்குகள் என்று சொல்லப்பட்டிருக்கும் பலவற்றை தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்துவிட்டது. எடுத்துக்காட்டாக, 2035-க்குள் தேசிய அளவில் மாணவர் சேர்க்கை விகிதத்தை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. ஆனால், தமிழ்நாடு, 2019-2020 கல்வி ஆண்டிலேயே 51.4 சதிவிகிதத்தை எட்டிவிட்டது. 2035-க்குள் தமிழ்நாடு 100 சதவிகிதத்தையே எட்டிவிடும். தமிழ்நாடு அரசு செய்ததை, செய்துகொண்டிருப்பதை தேசிய கல்விக் கொள்கையில் இணைத்துவிட்டு, தேசிய கல்விக் கொள்கையின்படி தமிழ்நாடு செயல்படுகிறது என்று சொல்வது நகைப்புக்குரியது.

முன்னோடி மாநிலமான தமிழ்நாட்டில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவு, மெஷின் லேர்னிங் போன்றவற்றில் வருங்காலத்தில் மிகத் தீவிரமாகப் பயிற்சிகள் அளிக்கப்படும். ஏனெனில் செயற்கை நுண்ணறிவைக் கையிலெடுக்கும் மாநிலமே இன்னும் பத்தாண்டுகளில் முன்னணி மாநிலமாக இருக்கப்போகிறது. அதற்கான அஸ்திவாரம்தான் ’டீல்ஸ்’... செம்ம ’டீல்’ இல்ல...?

## அப்புறம் எதற்குத்தான் ஆதார்?

நாட்டில் ரேசன் கார்டு இல்லாதவர்களிடம்கூட, ஆதார் கார்டு இருக்கிறது. ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், வங்கிச் சேவைகள், காப்பீடு என மக்களின் சகலவிதமான தேவைகளுக்கும் ஆதார் இருந்தால்தான் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நிலை இருக்கிறது.

ஆனால், கடந்த சில நாட்களுக்கு முன்பு, ஊழியர் வருங்கால வைப்பு நிதிக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ஆதார் அட்டையை பிறந்த தேதிக்குச் சான்றாகக் காட்டினால், அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று தெரிவித்துள்ளது.

மேலும் ஆதார் என்பது அடிப்படையான அடையாளக் கருவிதானே தவிர, அதனைப் பிறப்பு தேதிக்கு ஆதாரமாகக் கொள்ள இயலாது என்றும் தெரிவித்துள்ளது.

ஆதார் அடையாள அட்டை வழங்கும் அமைப்பிடம் இருந்து வந்த தகவலுக்குப் பிறகே வைப்பு நிதிக் கழகம் இந்த அறிவிப்பைச் செய்வதாகவும் தெரிவித்துள்ளது. ஆதார் மூலமாக தனிநபர் தகவல்கள் திருடப்படுகின்றன என்று ஏற்கெனவே பலரும் குற்றம்சாட்டி வரும் நிலையில், ‘பிறப்பு தேதிக்குச் சான்றாகக் காட்ட முடியாது என்றால், வேறு எதற்குத்தான் ஆதார்’ என்று கேள்வி எழுந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



## தொண்டன் மீது பரிவு!



குருசாமி

1976 ஆம் ஆண்டு நெருக்கடி நிலையைக் காரணம் காட்டி, கழக ஆட்சி கலைக்கப்பட்டது. மிசா வழக்கு நிதி வழங்க, தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதினார். இளம் வயது மாணவனாக, தலைவர் கலைஞரை அவரது கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, மிசா வழக்கு நிதி வழங்கினேன். அடுத்தாண்டு பொன்னேரியில் நடைபெற்ற என் திருமண விழாவுக்கு, கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்து, எங்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தியது மட்டுமல்லாமல், ஒரு சாதாரண தொண்டன் மீது கழகத் தலைவர் கொண்டிருந்த பரிவையும் வெளிப்படுத்தியது.

**-ஜி.குருசாமி, பொன்னேரி, திருவள்ளூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத் தலைவரின் முதல் தேர்தல் பணி!

**1968-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் 99-ஆம் வட்டத்தில் டி.கே.கபாலியும், 109-வது வட்டத்தில் இரா.சடகோபனும் போட்டியிட்டனர். இருவரையும் ஆதரித்து, கோபாலபுரம் இளைஞர் தி.மு.க தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டது. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முதல் தேர்தல் பணி இதுவாகும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 360

எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131